…EIVED 9-11-1986 PERIO…

விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 கார்த்திகை 3 ரபிஉல் 16 இதழ் 281

யாழ்ப்பாணம் புதன்கிழமை 19-11-1986

## விஜிதரன் கடத்தல் புதிர் நிறைந்த ஒரு சம்பவம்

### - விடுதலைப் புலிகள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ். பல்கலைக்கழகவர்த்தக பீடமாணவன் அ. விஜிதரன் காணாமல்போனது ஒரு பெரும் புதிர் நிறைந்த சம்பவமாக அமைந்துள்ளது. என்று தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இந்த சம்பவத்திற்கும் எமக்கும் எதுவித தொடர்பும் இல்லாதபோதும் கூடஎம்மீதுசந்தேகம்கொண்டு பலரையும் குழப்பத்தில் ஆழ்த்தத்தக்கவாறு பலகதைகள் பேசப்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. தமிழர் விடுதலைக்கூட்டணி உறுப்பினர்கள் ஆலாலசுந்தரம், தர்மலிங்கம் ஆகியோரது கொலைகளின் போது எம்மீதுசந்தேகம் எழுப்பப்பட்டதாகும். ஆனால் ரெலோ இயக்கம் அழியும் நிலையில் இந்த உண்மைபுலப்

(12ம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி ஜே. ஆரின் புதிய யோசனைகளை

# பிரபா ஏற்றுக் கொள்ளவில்லை

(சென்னை)

**பெங்களூரில் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கும் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிற்கும் இடையில் இலங்கை இனப்பிரச்னை தொடர்பாகநடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது ஜனாதிபதி ஜெயவர்த்தன முன்வைத்தயோசனைகளை ஏற்றுக்கொள்ளமுடியாதென தமிழீழ விடுதலைப்புலிகள் தலைவர் திரு வே.பிரபாகரன் தெரிவித்துள்ளார்.**

வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட வேண்டுமென்ற தமது இயக்கத்தின் யோசனைகளை, இலங்கை அரசின் யோசனைகள் ஏற்றுக் கொள்ளவில்லையெனக் கருத்துத்தெரிவித்த பிரபாகரன், அரசு முன்வைத்த யோசனைகளை ஏற்றுக் கொண்டால் தமிழர் தற்கொலை செய்ததற்கு ஒப்பாகுமென்று குறிப்பிட்டுள்ளார். எனினும் பேச்சுவார்த்தை தொடர்வதைத் தாம் எதிர்க்கவில்லையெனவும் அவர் கூறினார்.

தமிழர்களின் நலனைப் பொறுத்தவரையில் இந்தப் புதிய யோசனைகள் போதுமானதாக இல்லையெனப் புலிகள் தலைவர் தெரிவித்தார்.

இலங்கை சமர்ப்பித்த யோசனைகளின் பிரகாரம் கிழக்கு மாகாணத்தில் மூன்று மாகாணசபைகள் அமைக்கப்படும். மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை என்ற பெயர்களிலேயே இந்த மாகாணசபைகள் அமையும்.

மட்டக்களப்பில் தமிழ்மக்கள் பெரும்பான்மையாக அமைவார்கள். திருமலையில் சிங்கள மக்கள் பெரும்பான்மையுடன் இருப்பதோடு உறுதியான அரசியல் பங்கையும் வகிப்பர். அம்பாறை மாகாணம் முஸ்லிம் மாகாணமாக அமையும்.

ஒரு எல்லை நிர்ணயக் கமிஷன் அமைப்பதன் மூலமே இந்த யோசனைகளின் ஒருபகுதி தீர்க்கப்படும். திருமலை, அம்பாறையில் வாழும் தமிழ்மக்கள் தொடர்பாக இந்த எல்லை நிர்ணயக் கமிஷன் ஆராய்ந்து

(12 ம் பக்கம் பார்க்க)

பாதுகாப்புக்குறித்து

## மாணவர்மத்தியில் தளபதி கிட்டு உரை

[நமது நிருபர்]

அவசரகாலங்களில் மாணவர்கள் தங்களைப்பாதுகாத்துக் கொள்வதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தமிழீவிடுதலைப்புலிகளின் யாழ். குடாநாட்டுத் தளபதி திரு கிட்டு மாணவர்கள் மத்தியில் அறிவுரை வழங்கினர்.

(12ம் பக்கம் பார்க்க)

“நீதிநியாயமின்றி தடுப்புக்காவலில் வைத்திருக்கும்

## தமிழ் இளைஞர்களை உடன் விடுதலைசெய்யவேண்டும்”

### – கூட்டணி

கொழும்பு, செவ் ‘‘தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி தனது வீண்தனமான பேச்சுக்களை நிறுத்தி உடனடியாக எதுவித நியாயமுமின்றிச் சிறையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் ஆயிரக்கணக்கான தமிழர்களை விடுதலை செய்யவேண்டும்’’.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியற் குழு

(12ம் பக்கம் பார்க்க)

‘விஜி’ விவகாரம்:

## பல். மாணவரின் சாகும்வரை உண்ணாவிரதம் இன்று ஆரம்பம்

(நல்லூர் நிருபர்)

யாழ் பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் மர்மமாக காணாமல் போனதை எதிர்த்து பல்கலைக்கழக மாணவர் அமைப்பு குழுவினால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் இன்று காலை ஆரம்பமாக உள்ளது.

இன்று ஆரம்பிக்கப்படவுள்ள இவ் உண்ணாவிரதத்தில் ஐந்து பல்கலைக்கழக மாணவர்களும் பொதுமக்களில் ஒருவருமாக ஆறுபேர் கலந்து கொள்கிறார்கள்

இவ்உண்ணாவிரதம் ஆரம்பமாவதற்கு முன் காலை 9 00 மணிக்கு கைலாசபதி அரங்கில் உண்ணாவிரதம் இருக்கும் மாணவர்களின் அறிமுகமும் தொடர்ந்து அவர்களின் உரைகளும் இடம் பெறும். இதனைத்தொடர்ந்து மாணவர்கள் பல்கலைக்கழக உப-வேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனிடம் கடிதமொன்று கையளிக்கப்படவுள்

[12ம் பக்கம் பார்க்க]

## இந்.- இலங்கை வெளியுறவு மந்திரிகள் தொடர்ந்து பேச்சு

புதுடில்லி, நவ. 19

இலங்கை இனப்பிரச்னையின் தீர்வுக்காக மேலும் விரிவானதும் ஏற்புடையதுமான யோசனைகள் உருவாக்க இந்திய வெளிவிவகார இணை அமைச்சர் திரு. நட்வார்சிங், உள்துறை இணையமைச்சர் திரு சிதம்பரம், இலங்கை வெளிவிவகார அமைச்சர் திரு, ஏ. ஸி. எஸ். ஹமீட் ஆகியோர் நேற்று முன்தினமிரவும் நேற்றும் நீண்டநேரம்

[12ம் பக்கம் பார்க்க]

## ராஜீவ்-ஜே.ஆர்.பேச்சில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது

### – தமிழ்நாடு உணவு அமைச்சர்

[சென்னை]

இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்குமிடையே நடைபெற்ற பேச்சுக்களில் மாகாணசபைகளுக்கு அதிகாரப் பகிர்வு குறித்த பேச்சுவார்த்தையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகத் தமிழ்நாடு உணவு அமைச்சர் திரு எஸ். ராமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழ்நாடு சட்டப் பேரவையில் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே திரு. ராமச்சந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்; இலங்கைத் தமிழர்கள் வாழும் வடக்குக் கிழக்குப் பகுதிகளைத் தாயகமாகக் கொள்ளவேண்டுமென்ற கருத்துக்குறித்து இன்னமும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாகவும், இந்த இரண்டு பகுதிகளையும் தனித்தனி மாகாணங்களாகக் கருத வேண்டு

(12 ம் பக்கம் பார்க்க)

## ‘‘எமது உரிமைகள் பின்புறமாகப் பறிக்கப்படுவதை அனுமதிக்கக்கூடாது’

நல்லூர், நிருபர்

ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராகப் போராடும் இவ்வேளையில் பின்புறத்தால் எமது உரிமைகள் பறிக்கப்படுவதை அனுமதிக்கக்கூடாது என்று யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்றுவரும் உண்ணாவிரதப்போராட்டத்தில் நேற்றைய போராட்டத்தை முடித்து வைத்துப் பேசிய பேராதனைப் பல்கலைக்கழக மாணவன் திரு. டேவித் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்; தமிழ் மக்களின் மத்தியிலுள்ள புத்திஜீவிகளின் அழிப்பு சமுதாயத்தின் அழிவுக்கே வழிகோலும் என்றார்.

யாழ். பல்கலைக்கழக மாணவன் அ. விஜிதரன் கடத்தலுக்கு கண்டனம் தெரிவித்து நடைபெற்றுவரும் இவ் உண்ணாவிரதப் போராட்டம நேற்று மூன்றுவது கட்டமாக நடைபெற்றது.

நேற்று நடைபெற்ற 3-ம்

[12-ம் பக்கம் பார்க்க]

## “மரணப்படுக்கையிலுள்ள தாயாரை பார்க்கவும் அனுமதி மறுக்கப்பட்டது”

### ஜனாதிபதிக்கு பிதா சிங்கராயர் கடிதம்

கொழும்பு, செவ்

‘‘எனது அன்னை 86 வயதில் தனது இறுதிகாலத்தை மரணப் படுக்கையில் கழித்துக் கொண்டிருக்கிறார். இவ்வேளை இறுதியிலாவது அவரை சென்று பார்க்க எனக்கு அனுமதியளிக்குமாறு கோரி நீதியமைச்சருக்கு எழுதிய கடிதமும் நிராகரிக்கப்பட்டுள்ளது’’

திருநியங்க விஜயபாலதின விற்கு தாம் எழுதிய கடிதம் நிராகரிக்கப்பட்டது தொடர்பாக வணபிதா சிங்கராயர் ஜனாதிபதி ஜயவர்த்தனவுக்கு ‘பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் மனித அடிப்படை உரிமைகள் மறுப்பு’’ எனும் தலைப்பில் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில் அவர்மேலும்

[12 ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல இன மிளகாய் கன்று கள் விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ளவும் அண்ணா பாம் இணுவில். (C 3121)

நல்ல இன கோழிகள் (BROILES) புறெயிலஸ் விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ளவும் அண்ணா பாம் செம்மாதெரு, யாழ்ப்பாணம் [C 3120]

காலிநடைகளுக்கு உகந்த விஷேட ''மினரல் மிக்சர் கல்சியப்பவுடர்'' மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம் M G M 781, K K S Road and 208, 1st Cross St Jaffna. T. P. 22611 [C 5073]

பழைய ஓடுகள், பனை மரங்கள், திராந்திகள், நிலைகள், யன்னல்கள் கதவுகளுடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு Dr.M. சபாரத்தினம், காங்கேசன்துறைவீதி கொக்குவில் (கொக்குவில் சந்திக்கருகாமையில்) (C 0824)

தரமான அரிசி, மாட்டுத்தீன், கோழித்தீன், முட்டை ஆகியவற்றை இங்கே பெற்றுக் கொள்ளுங்கள். யாழ். அரிசிக் களஞ்சியம், ஸ்ரான்லி வீதி (ஸ்ரீதர் தியேட்டர் முன்பாக) யாழ்ப்பாணம். (C 5781)

Golden Comet சேவற் குஞ்சுகள் 19ந் திகதி புதன் கிழமையும், Bairaba Farms புறேயிலர் குஞ்சுகள் 21ந் திகதி வெள்ளிக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியேபதிவு செய்க. சற்குணராசா பிறதர்ஸ், பிரப்படி கொக்குவில். (C 5828)

தெல்லிப்பளையில் அரசினர் வைத்தியசாலைக்கும் புகையிரதநிலையத்திற்கும் மத்தியில் பருத்தித்துறை - மூளாய் பிரதான வீதியிலமைந்த 3 பரப்புக்காணி கிணற்றுப்பங்குடன் விற்பனைக்குண்டு உடனடியாகத் தொடர்பு கொள்ளவும், திருமதி பரமானந்தன், பார் மணியம் வீதி, தெல்லிப்பளை. C 5852

மலிவுவிற்பனை 23 ரூபா பெறுமதியான பஜனுவளி [கூட்டுப்பிரார்த்தனை நூல்] 22-11-86 சனிக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும் வெளியீட்டுவிழாவில் ரூபா 10/- க்கு வழங்கப்படும். அனைவரும் வந்து பெற்றுக் கொள்ளுங்கள். சிவா பிறின்டேர்ஸ். கைதடி. [C 5863]

## வகுப்புகள்

108 Brown Road, Jaffna A/L 87 அசேதன இரசாயனம் ஆரம்பம்: 22-11-86, ஆசிரியர்: சதீஸ், சனி 2-30 p m. நேரங்கள்: சனி, ஞாயிறு 2-30 to 4-30 p. m. [C-5876]

Radio - TV. வெல்டிங், வயறிங், மோட்டார் வைண்டிங், மோட்டார் மெக்கானிசம், தட்டெழுத்து - சுருக்கெழுத்து 22-11-86ல் ஆரம்பமாகவுள்ளன. தொடர்பு: Vispa Engineering Hall 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C 5839

## விற்பனைக்கு

யாழ் நகர எல்லைக்குள், பிரதான வீதி அருகாமையில் சகல வசதிகளுடன் பெரிய வீடு 2500 சதுரஅடி விஸ்தரிப்பில்) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- N. C. இராஜநாயகம், 32/28, அச்சுக்கூட ஒழுங்கை, யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 24147-23864. (C 5790)

## தவறிவிட்டது

க. சித்திவிநாயகவடிவேல் என்பவரின் பாஸ்போர்ட் H 0499915 தவறிவிட்டது கண்டெடுத்தவர் கே எஸ் மருதையா, தெல்லிப்பழை மேற்கு, தெல்லிப்பழை என்ற முகவரிக்கு அறிவிக்கவும். சன்மானம் வழங்கப்படும். [C-5860]

கந்தையா தம்பிமுத்து ஊரெழு மேற்கு, சுன்னாகம். இல. 271401280 V என்பவருடைய அடையாள அட்டை 17-11 86 யாழ் நகர் எல்லைக்குள் தவறிவிட்டது இதைக் கண்டவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். [C 5873]

## மணப்பந்தல்

உயர் சைவ வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த டுபாயில் ஐந்து வருடங்கள் மோட்டார் மெக்கானிக்காகப் பணியாற்றி விடுமுறையில் வந்திருக்கும் 4ல் செவ்வாயுடைய 35 வயது வாலிபருக்கு மணப் பெண் தேவை. சாதகக் குறிப்போடு தொடர்புகொள்ளவும்: விசுவநாதன் கமலநாதன், 31/1 சங்கிலியன் வீதி, நல்லூர். [C-5864]

உயர் சைவவேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த ஜெர்மனியில் இருவருடம் வேலைசெய்த தற்பொழுது கனடாவில் தொழிற்சாலை ஒன்றில் உயர் அதிகாரியாக பணியாற்றும் 2ல் செவ்வாயுடைய 30 வயது வாலிபருக்கு மணப் பெண் தேவை. கனடா தேசத் தொடர்பு உடையவர்கள் மட்டும் சாதகக்குறிப்போடு தொடர்புகொள்ளவும். விசுவநாதன் கமலநாதன் 31/1, சங்கிலியன் வீதி, நல்லூர். [C 5865]

## சேவை

தரமான ரேூனியோ, தட்டச்சு, அச்சக வேலைகள் மிகவும் சிறந்த முறையில் உடன் செய்து கொள்ள நாடுங்கள் பாடசாலைகட்கு விஷேட கழிவு வழங்கப்படும். தொடர்பு: தயா அச்சகம், 138, நாவலர் றோட், (மனோகரா தியேட்டர் அருகாமை) யாழ்ப்பாணம். [C-5875]

உங்களுக்குத் தேவையான பொருட்கள் எவையானாலும் வாங்கவும் / விற்கவும் தினசரி எம்மிடம் வாருங்கள். லக்கி பெனிபிட் கோ. லிமிட்டட் சந்திக்கருகாமையில், கோப்பாய். (C 5823)

கைரேகை, கிரகநிலை, எண் சோதிடம் என்பனவைக் கொண்டு தங்கள் வாழ்வின் உண்மை நிலை கூறப்படும். மணமகன் மணமகள் தேவையானவர்கள்செவ்வாய்க் குற்ற முள்ள சாதகர்களும்) சகல மதத்தவர்களும் தொடர்பு கொள்ளலாம பிரபல கைரேகை எண்சோதிட நிபுணர், செ. நாகேந்திரராசா 174/16 கோவில் வீதி, நல்லூர், கைலாசபிள்ளையார் கோவில் வழி. C 5772



# University of Jaffna, Sri Lanka.

## TENDERS FOR THE SUPPLY AND INSTALATION OF AIR CONDITIONER

Tenders are hereby called for the Supply and Installation of

I) Split type Air Conditioner (18 000 BTU)
II) Split type Air Conditioner (24 000 BTU)
III) Window type Air Conditioner (18 000 BTU)
IV) Window type Air Conditioner (24 000 BTU)

Tenders should be addressed to Bursar, University of Jaffna and should reach on or before 10th December 1986 The No UJ/F/SK/11/86 should be marked on the left hand corner of the envelope.

REGISTRAR.

[A 3117]

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

மரணசாதனமின்றிமரணமெய்திய சங்குவேலி தெற்கைச் சேர்ந்த வைத்தியர் கிருஷ்ணபிள்ளை இராசலிங்கத்தின் மரணச் சொத்து விடயத்தில்.

மரணமெய்தியவர்.

மரணசாதன நியாயாதிக்கம் } இல. ரீ/296

வைத்தியர் கிருஷ்ணபிள்ளை இராசலிங்கத்தின் கைம்பெண் நாகம்மா. சங்குவேலி தெற்கு, மானிப்பாய்.

மனுதாரர்.

எதிராக

1. வைத்தியர் கிருஷ்ணபிள்ளை இராசலிங்கம் மகள் இந்திரா. இவர் பராயமற்றவர். தனது வழக்கு பாதுகாவலர் 2ம் எதிர் மனுதாரர் மூலம்.
2. கந்தப்பிள்ளை துரைசிங்கம் இருவரும் சங்குவேலி தெற்கு, மானிப்பாய்.

எதிர்மனுதாரர்கள்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்துக்களை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இதனால் கட்டளையிடப்படுகின்றது.

ஆட்சேபனையுள்ள ஆள் எவராவது 1986ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3ம் திகதி முற்பகல் 8 30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1986ம் ஆண்டு நவம்பர் மாதம் 7ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி

வி. இராமச்சந்திரஐயர்,
பதிவாளருக்காக.

இ. மஹேந்திரன்,
மனுதாரரின்
சட்டத்தரணி. (C 5774)

யாழ். நவீன சந்தை

# மக்கள்வங்கி அதே இடத்தில் தொடர்ந்தும் இயங்கும்

யாழ்ப்பாணம், புதன் ''யாழ் நவீன சந்தை மக்கள் வங்கிக் கிளை மூடப்படவில்லை. இதனைத் தொடர்ந்து நடத்த முடிவுசெய்தோம். உங்கள் முழு ஆதரவுடனும் ஒத்துழைப்புடனும் அதே இடத்தில் வங்கி செயற்பட ஆரம்பித்துள்ளது.''

இரு வாரங்களுக்கு முன் 'ஷெல்'லினால் தீக்கிரையான யாழ். நவீன மார்க்கட் மக்கள் வங்கிக் கிளையை மீண்டும் அதே இடத்தில் நேற்று குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்த மக்கள் வங்கிப் பிரதேச முகாமையாளர் திரு. எம். கணேசசுந்தரம் இவ்வாறு கூறினார்.

வாடிக்கையாளர்கள், வர்த்தகர்கள் உட்படப்பலர் பங்குபற்றிய இத்திறப்பு விழாவில் அவர் மேலும் பேசுகையில், ''பல இடங்களில் குறிப்பாக வல்வெட்டித்துறை, ஊர்காவற்றுறை, பருத்தித்துறையில் வங்கிக் கிளைகள் பாதிக்கப்பட்டபோது அவற்றை வாடிக்கையாளர் நன்மைகருதி வேறிடங்களில் நடத்தினோம். அதேபோல் இந்தக் கிளையையும் இன்னொரு இடத்தில் நடத்தவிருந்தோம். ஆனால் வாடிக்கையாளர் நன்மை கருதி அதே இடத்தில் நடத்த முடிவுசெய்தோம்'' என்றார்.

வங்கிக் கிளை முகாமையாளர் திரு. செல்லையா பேசுகையில், வங்கிப் பெட்டியிலிருந்த கணக்குப் புத்தகங்கள், தஸ்தாவேஜுகள் எதுவும் தீக்கிரையாகவில்லை என்று கூறினார். சகல வாடிக்கையாளர்களும் தொடர்ந்தும் தமது தொடர்புகளை வைத்துக் கொள்ளலாம் என்றும் கூறினார்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு சி. வீ. கே. சிவஞானம் பேசுகையில், இதே இடத்தில் மீண்டும் இக்கிளை குறுகிய காலத்தில் திறக்கப்பட்டுள்ளது வாடிக்கையாளர்களுக்கு நன்மையளிக்கும் என்றார்.

யாழ். நவீன மார்க்கெட் வர்த்தகர் சங்கத் தலைவர் திரு. ஏ சங்கரப்பிள்ளை பேசுகையில், எத்தனைமுறை 'ஷெல்' அடித்தாலும் வர்த்தகர் எவரும் இடம் மாறப்போவதில்லை என்றார். [இ-எ]

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



செல்வன் கபில்ராஜ்

நவாலி தெற்கைச் சேர்ந்த தற்போது கீரிமலையில் வசிக்கும் தர்மராஜா இராஜேஸ்வரி தம்பதிகளின் புதல்வன் கபில்ராஜ் இன்று [19-11-1986] தனது முதலாவது பிறந்த நாளை வெகுவிமரிசையாக கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பம்மா, பூட்டன், பூட்டி, பெரியம்மாமார், பெரியப்பாமார், மாமன்மார், மாமிமார், மச்சான்மார், மச்சான் ார், சித்தப்பா, சித்திமார், அக்காமார், அண்ணன்மார், தங்கை, தம்பி எல்லோரும் இவரை பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள். C 5 81

# தெல்லிப்பழை யூனியன் கல்லூரி முன்னணியில்

மாவிட்டபுரம் செவ்.

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெறும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் 15 வயதிற்குட்பட்டோர் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வெற்றி வாகை சூடி முன்னணியில் திகழ்கிறது.

மேற்படி உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் அரை இறுதிப்போட்டி யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற சமயம் 15வயதிற்குட்பட்டோர் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும், காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரியும் மோதின. அச்சமயம் யூனியன் கல்லூரி 2-1 கோல்களால் வெற்றி பெற்று இறுதிச் சாம்பியன் போட்டிக்குத் தெரிவாகியது.

யூனியன் கல்லூரியைச் சேர்ந்த ஆர். ராஜ்குமார், ஆர். கோடீஸ்வரன் ஆகியோர் ஒவ்வொரு கோல்களைப் போட்டனர்.

எதிர்வரும் சனிக்கிழமை யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும் சாம்பியன் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியுடன் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மோத இருக்கிறது.

## விளம்பரதாரருக்கு ஓர் அறிவித்தல்

'ஈழநாடு' இதழில் நினைவஞ்சலி, பிறந்த நாள் வாழ்த்து போன்ற விளம்பரங்களைப் பிரசுரிக்க விரும்பும் விளம்பரதாரர்கள், குறித்த விளம்பரம் பிரசுரமாவதற்கு முதல்நாள் நண்பகல் 12-30 மணிக்கு முன்னர் காரியாலயத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறோம்.

நிர்வாகி, ஈழநாடு.

[A-3119]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடகொரியா அதிபர் குறித்து தென் கொரியா பொய்ப்பிரசாரம்!

பியோங்பாங், நவ 18

வடகொரிய ஜனாதிபதி திரு. கிம்எல்சுன் கொலைசெய்யப்பட்டுள்ளார் என்று தென்கொரிய செய்திகள் நேற்று அறிவித்துள்ளபோதிலும் அவர் உயிருடன் இருப்பதாக சீன செய்திஸ்தாபனமொன்றும் வடகொரிய செய்திஸ்தாபனமும் அறிவித்துள்ளன.

தென்கொரிய—வடகொரிய எல்லைப் புறத்தில் வடகொரிய வானொலிச் சேவை, வடகொரிய அதிபர் கிம்எல்சுன் சதிப்புரட்சியொன்றில் கொலையுண்டிருப்பதாக அறிவித்திருப்பதாக தென்கொரியபாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது.

இந்த அறிவிப்பு சர்வதேச செய்திச் சேவைகளின் முக்கியம்பெற்று அனைத்து செய்திஸ்தாபனங்களும் இதற்கு முக்கியத்துவம் அளித்தன.

ஆனால் நவசீன செய்திஸ்தாபனமும் வடகொரிய செய்திஸ்தாபனமும் இந்த அறிவிப்பை மறுத்துள்ளன.

**உலகச் செய்திகள்**

நேற்று வடகொரியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட மொங்கோலிய நாட்டு அதிபரை வரவேற்க வடகொரியாவின் பியோங்யாங் விமானநிலையத்துக்கு திரு. கிம்எல்சுன் வந்திருந்ததாகவும் அவர் நல்ல உடல் நலத்துடன் அருகில் நின்றவர்களோடு கலகலப்பாக உரையாடியதாகவும் மேற்குறிப்பிட்ட செய்திஸ்தாபனங்கள் அறிவித்தன.

இந்த அறிவிப்புக்களின் பின்னரும் தென்கொரியா தனது தவறான செய்தியை தொடர்ந்து அறிவித்துக் கொண்டே இருந்தது. வடகொரிய பாதுகாப்பமைச்சர் யெல்யூ புதிய அதிபராகப் பதவியேற்றுள்ளார் என்றும் அறிவித்தது.

வட, தென்கொரியாக்களுக்கிடையே கொரிய எல்லைப் புறத்தில் தோன்றியுள்ள பதட்ட நிலையே தென்கொரியாவின் இந்தத் தவறான அறிவிப்புக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'ரெனோல்ட்' அதிபர் சுட்டுக் கொலை!

பாரிஸ், நவ 18

பிரான்ஸின் தேசிய தயாரிப்பான 'ரெனோல்ட்' மோட்டார் கார் கம்பெனியின் அதிபர் ஜோர்ஜ் பெஸ்ட் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

பாரிஸில் நேற்று ஒரு ஆணும் பெண்ணும் இவரது இல்லத்துக்கு வெளியே இவரைச் சுட்டுக் கொன்றதாக அறிவிக்கப்பட்டது.

உடலில் பல இடங்களிலும் இவர் சுடப்பட்டார். இக்கொலைச் சம்பவம் பிரான்ஸ் அரசை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இந்த வருடம் பிரான்ஸில் சுமார் 20 குண்டுவெடிப்புச் சம்பவங்களில் ஈடுபட்ட தீவிர இடதுசாரிப் பிரிவினரே இந்த கொலைச் சம்பவத்தில் ஈடுபட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

பிரான்ஸ் பிரதமர் திரு. சிராக்கி சம்பவம் இடம்பெற்ற இடத்தை நேரில் சென்று பார்வையிட்டார். பிரெஞ்சு அதிபர் திரு. மித்தரோன், இச்சம்பவத்தைக் கண்டித்திருப்பதுடன் இது போன்ற பயங்கரவாதத்துக்கு எதிராக பிரான்ஸ் மக்கள் ஒன்றுபட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

''ரெனோல்ட்'' மோட்டார் கார் கம்பனி அதிபர் ஜோர்ஜ் பெஸ்ட் ஒரு அனுபவம் வாய்ந்த தொழிலதிபராவார். 58 வயதான இவர் கடந்த ஆண்டு ஜனவரியில் இக்கம்பனியின் அதிபராக பிரான்ஸ் அரசினால் நியமிக்கப்பட்டார்.

## பிலிப்பைன்ஸில்———

# பொது வேலைநிறுத்தம் மேற்கொள்ள ஏற்பாடு!

மணிலா, நவ 18

பிலிப்பைன்ஸில் பொதுவேலைநிறுத்தமொன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்நாட்டின் பிரதான தொழிற்சங்கமொன்று இந்த அழைப்பை விடுத்துள்ளது.

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி திருமதி கொரஸோன் அக்கினோவின் நெருங்கிய சகாவும் இடதுசாரித் தொழிற்சங்கப் பிரமுகருமான ரொலாண்டோ ஒலாலியா கொலைசெய்யப்பட்டதைக் கண்டித்தே இந்த பொது வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இக்கண்டன வேலைநிறுத்தத்தில் பாதுகாப்பமைச்சர் யுவான்பொன்ஸ் என்றிலேயை பதவிநீக்கம் செய்யும்படியும் வேலைநிறுத்தக்காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திரு பெனிக்னோ அக்கினோ கொலைசெய்யப்பட்ட பாணியில் ஒலாலியோவும் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

## மன்னர் பிரேந்திரா

# திருப்பதி தரிசனம்!

புதுடில்லி, நவ 18

நேபாள மன்னர் பிரேந்திரா திருப்பதி வேங்கடேஸ்வரர் தேவஸ்தானத்துக்கு யாத்திரை மேற்கொண்டுள்ளார்.

இரண்டாவது 'சார்க்' உச்சி மகாநாட்டில் கலந்து கொள்வதற்கு பெங்களூர் வந்திருந்த நேபாள மன்னர், நேற்று தமது பாரியார் சகிதம் ஆந்திராவில் உள்ள திருப்பதி தேவஸ்தானத்திற்குச் சென்றார்.

'சார்க்' உச்சி மகாநாட்டுக்கு இந்தியா வந்த தேசத் தலைவர்கள் அனைவரும் தாயகம் திரும்பிவிட்டனர். மன்னர் பிரேந்திரா மட்டுமே திருப்பதி தரிசனத்துக்காக தமது புறப்பாட்டைப் பின்போட்டுள்ளார். வியாழக்கிழமை இவர் தாயகம் திரும்புவார் என்று தெரிவிக்கப்பட்டது.

உலகின் ஒரேயொரு இந்து இராச்சியம் நேபாளம் என்பதும், அதன் மன்னர் பிரேந்திரா என்பதும் குறிப்பிடத்தக்கது.

## போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம். புதன்.

காரைநகர் வாரிவளவு நல்லைக்கச்சபை ஆதரவில் அப்பகுதி பாடசாலை மாணவர்களிடையே க.பொ.த. சாதாரண) விஞ்ஞான, கணித பாடங்களுக்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 22ம், 23ம் திகதிகளில் யாழ்ரன் கல்லூரியில் நடைபெறவுள்ளது

கடந்த 15-ம், 16ம் திகதிகளில் நடைபெறவிருந்த இப்பரீட்சைகள் தவிர்க்கமுடியாத காரணங்களால் பின்போடப்பட்டது தெரிந்ததே. (சி)

## சார்க் மாநாடு:

# "நாடுகளிடையே ஒத்துழைப்பு வலுப்படுத்தப்பட வேண்டும்"

## — சார்க் தலைவர்கள்

பெங்களூர், நவ 18

தென்னாசிய பிராந்தியத்தில் நாடுகளுக்கிடையே ஒத்துழைப்புவலுப்படுத்தப்பட வேண்டுமென்று இன்று முடிவடைந்த 'சார்க்' மாநாட்டில் கலந்து கொண்ட தலைவர்கள் கேட்டுள்ளனர்.

இதுசம்பந்தமாக விடுக்கப்பட்ட இறுதிப்பிரகடனத்தில் பிராந்திய நாடுகளிடையே பரஸ்பரம் நன்மையளிக்கும் ஆலோசனைகளையும் தொழில்நுட்ப அனுபவங்களையும் பரிவர்த்தனை செய்துகொள்ள வேண்டுமென்றும் கேட்கப்பட்டுள்ளது. (ஊ)

# புலிகளின் அரண்மீது ராணுவம் ஷெல் தாக்குதல்

வல்வெட்டித்துறை, செவ்.

வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து புலிகளினால் பலப்படுத்தப்பட்டு கிழக்குப் பகுதியிலமைந்துள்ள பாதுகாப்பு அரண்கள் மீது ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த செவ்வாய்க்கிழமை குண்டுவீச்சு விமானம், ஹெலிகாப்டர் ஆகியவற்றால் வல்வை இராணுவ முகாமைச்சுற்றி அமைந்துள்ள புலிகளின் பாதுகாப்பு அரண்கள் சிலவற்றுக்கு குண்டுகள் வீசப்பட்டன. இதனால் சில அரண்கள் சிறிது சேதமுற்றன இரு தினங்களின் முன்பு விடுதலைப் புலிகள் மீண்டும் தமது பாதுகாப்பு அரண்களை மேலும் பலமுள்ளதாக சீரமைத்துள்ளனர்.

இந்த பாதுகாப்பு அரண் மீதே கடந்த இரவு வல்வை முகாமிலிருந்து இராணுவத்தினர் பல தடவைகள் ஷெல் தாக்குதல் நடத்தினர். [ரா]

# 'பயங்கரவாதம்' பற்றிய வரைவிலக்கணம் 'அவுட்'

பெங்களூர், நவ 18

'சார்க்' மாநாட்டின் இறுதிப் பிரகடனத்தில் பயங்கரவாதத்துக்கு கொடுக்கப்பட்டுள்ள வரைவிலக்கணத்தை ஏற்றுக்கொள்வதில்லையென மாநாட்டில் கலந்துகொண்ட தலைவர்கள் முடிவுசெய்துள்ளனர்.

ஆயினும் பயங்கரவாதம் பிராந்தியத்திலுள்ள மக்களின் பொருளாதார சுபீட்சத்துக்கும் அரசியல் வாழ்வுக்கும் அச்சுறுத்தலாக இருப்பதால் அதனை இறுதிப்பிரகடனம் கண்டித்துள்ளது.

## செயலகம் நேபாளத்தில்

'சார்க்' மாநாட்டின் செயலகம் நேபாளத்தின் தலைநகரம் காத்மண்டுவில் அடுத்த ஜனவரிமுதல் இயங்கவுள்ளது. இதன் முதலாவது செயலாளர் நாயகமாக பங்களாதேஷைச் சேர்ந்த ராஜதந்திரியான அபூ ஹஸன் கடமையாற்றுவார்.

## தெற்காசிய ஒளி, ஒலிபரப்பு

தெற்காசிய நாடுகளில் வானொலி, தொலைக்காட்சி சேவைகளை உள்ளடக்கிய தெற்காசிய ஒலி, ஒளிபரப்புச் சேவைகளை ஆரம்பிக்கவேண்டுமெனவும் தெற்காசிய நாடுகளின் தலைவர்கள் இணக்கம் கண்டுள்ளனர். (ஊ)

## விழிப்புலனற்றோர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், புதன்.

யாழ் பல்கலைக்கழக வணிக பீட மூன்றும் ஆண்டு மாணவன் அ விஜிதரன் இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டதையிட்டு நாம் மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடையும் அத்தவேளையில் இச் சம்பவத்தால் துயருற்றிருக்கும் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள், நிர்வாகிகள், மற்றும் ஏனையோருடன் எம்மையும் இணைத்துக்கொள்கின்றோம்.

இவ்வாறு யாழ் விழிப் புலனற்றோர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்தஅறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழினம் மிகவும்நெருக்கடியான ஒரு காலகட்டத்தைக் கடந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் இச் சம்பவம் நடத்திருப்பது மிகவும் வேதனைக்குரியதாகும். இச்சம்பவத்தால் எமது இனம் மிகவும் பாரதூரமான விளைவுகளை எதிர்நோக்க நேரிடும்.

இதனைமனதில் கொண்டு இக்கடத்தல் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் யாராலும் தயவு செய்து உடனடியாக எவ்வித நிபந்தனையுமின்றி மாணவன் விஜிதரனை விடுவிக்குமாறு மிகவும் பணிவாக வேண்டுகின்றோம். (வா)

# "புனித இயக்கத்தினர் எமது நிர்க்கதியைப் போக்குவர்"

## -தந்தை நம்பிக்கை

யாழ்ப்பாணம், புதன்

''மர்மமான முறையில் காணாமற்போன எனது மகனின் நிலையையிட்டு எதுவிதத் தகவலும் இதுவரை கிடைக்கவில்லை. இந்நிலையில் எனது மனைவியும் நான்கு பெண் பிள்ளைகளும் பெரும் நிம்மதியற்றுத் தினமும் கண்ணீர் சிந்தியவாறுள்ளனர்''

இவ்வாறு கண்ணீர் வழிந்தோடிய நிலையில் விஜிதரனின் தந்தையார் கூறினார்.

''இன்று யாழ். மாவட்டத்தை முழு அளவில் நிர்வகிக்கும் புனித இயக்கங்களிடம் எனக்குப் பரிபூரண நம்பிக்கையுண்டு. அவர்கள் எப்படியும் எனது மகனை மீட்டுத் தருவதில் தமது கடமையைச் செவ்வனே செய்வார்கள் என்பதிலும் பூரண உறுதி எனக்கு உண்டு'' என்று கூறிய அவர், ''எமது குடும்பத்தின் நிர்க்கதியைப் போக்கி மீண்டும் ஒருநல் வாழ்வை எமக்களிப்பார்கள் என்றே நினைக்கிறோம். எமது பெண் பிள்ளைகளை மட்டுநகரில் விட்டுவிட்டு நானும் மனைவியும் இங்கு வந்துள்ளோம். இன்றைய நிலையில் எமது குடும்பம் அனுபவிக்கும் இன்னல்களை எம்மால் எடுத்துரைக்கவே முடியவில்லை'' என்றார். (எ)

## கறுப்புப்பட்டி

(நமது நிருபர்)

யாழ். பல்கலைக் கழகத்தில் நேற்று உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட மாணவர்களும், மற்றும் அங்கு சென்ற அனைவரும் மாணவர் ஐக்கிய முன்னணி வெளியிட்ட கறுப்புப் பட்டியை அணிந்திருந்தனர். அதில் ''ஜனநாயகம் மறுக்கப்பட்டவர்களில் இறுதி மனிதன் விஜிதரன் ஆகட்டும்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## இன்று கூட்டம்

இன்று புதன் காலை சாகும் வரை உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்படும் முன்பதாக யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் ஒருகூட்டம் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது இதில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் மாணவர்கள் அறிமுகம் செய்து வைக்கப்படுவர்.

இக்கூட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்களும் பொது மக்களும் கலந்து கொள்வர்.

(நல். நிரு. ஊ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

வாழ்க்கைவசதிகளை அதிகரிப்பதென்பது, எந்தவிதத்திலும் ஒழுக்க வளர்ச்சிக்கு உகந்ததாகாது என்றே பொதுவாகக் கூறலாம்;

—மகாத்மாகாந்தி

# நமது நோக்கு

## எங்கள் தந்தையர் நாடு

ஒரு நாட்டின் தேசிய இனம் என்றால் என்ன? அது ஒரு சாதி மாத்திரமல்ல, அதற்கு மொழி, இலக்கியம், இசை கலை. இவற்றிற்கு அடிப்படையான சமயம் முதலியன அமைதல்வேண்டும்.

பெறும் அதிகாரம் மாத்திரம் அமைந்தால் போதாது. நாம் ஆங்கிலேயராகவோ வேறெந்த நாட்டவராகவோ இனத்தவராகவோ நடித்தால் அம்மக்களின் புலமை உண்டாக மாட்டாது எனவேஎங்கள் தேசியம் அபிவிருத்தியடைவதானல், நமக்கொரு நிரந்தரஉறைவிடம் வேண்டும்.

இந்த அவசிய தேவை நாட்டில் வாழும் வேறெந்த இனத்துக்கோ அல்லது நாட்டில் வாழும் பெரும்பான்மை மக்களுக்கோ எதிரான கோட்பாடு அல்ல; இது சரிவரச்செயற்படுவது எங்கள் தேசாபிமானத்திலும் எம்களுடன் சகவாழ்வு வாழும் ஏனையஇனங்களின் நல்லுறவிலும் தங்கியிருக்கிறது. இந்த நிபந்தனை நிராகரிக்கப் படும்போதுதான் சிக்கல் தொடங்குகிறது.

பெரும்பான்மையரின் ஆட்சிய ஜனநாயகம் என்று சொல்லும் போது அங்குவாழும் சிறுபான்மையரின் சம்மதம் இன்றியமையாததென்பதுவெளிப்படையாகக் கொள்ளப்படுகிறது;

இன்று நாடு காணும் அராஜகம் இக்கருத்துக்கள் எவ்வித பெருந்தன்மையுமின்றி உதாசீனப்பட்டதாலே என்பது இந்நாட்டில் மட்டுமல்ல இந்தியாவிலும் ஏனைய நாடுகளிலும் பிரசித்தம்.

இங்கு உருவானபோராட்டத்தை மிகத்தெளிவாக உணர்ந்து அதனை சமாதான ரீதியில்தீர்த்துவைக்க உறுதிகொண்டவர் உலகத்தலைவர்களில்உத்தமரென்று கணிக்கப்படும் அமரர் இந்திராகாந்தி;

அவருடைய பிறந்ததினமாகிய இன்று இலங்கை வாழ் தமிழ்மக்கள் மட்டுமல்ல பெரும்பான்மை சிங்கள சமூகத்தவரும் இஸ்லாமியரும் அவருக்கு நன்றி செலுத்தி அவர் நாமம் என்றும் வாழ வாழ்த்த வேண்டிய கடப்பாடுடையவர்கள்.

தமிழ்த்தலைவர்கள் குறிப்பாக அமரர் கதிரவேற்பிள்ளை எம் பி., இந்திராவின் நேரடி உதவியை நாடி டில்லி சென்ற வழியில் உயிர் நீத்ததை நாம் இங்கு குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளோம்.

இலங்கை அரசு - ஆளும் கட்சி எதுவானதாலும் இங்கு வாழும் தமிழ் மக்களை வடக்கு கிழக்கு மலையக மக்களை மாற்றான் தாய் போல நடத்திவருவதும், எவ்வித நியாயமான தீர்வையும் தட்டிக் கழிப்பதையும் சகிக்க முடியாத நிலையில் இதய நோயுடன் எடுத்த பெரும்பயணம் கதிரவேற்பிள்ளையின் வாழ்க்கையில் முன்னணிலைக்க வைத்தது!

சிங்கள மக்களுடன் சகவாழ்வு வாழ முடியாத நிலையை அவர்கள் மத்தியில் பிறந்து வளர்ந்த பெருமனம் படைத்த கதிரவேற்பிள்ளை உணர்ந்தாரென்றால் அது ஒரு ஆபத்தான கட்டம். அக்கட்டத்தை உணரமுடியாத அரசியல் ஞானம் இந்நாட்டின் தலைவிதியாக இன்றுமிருக்கிறது.

சிறுபான்மையினரை பெருந்தன்மையுடன் நாட்டின் மத்திய அரசியலில் தக்க உரிமை அளித்துவாழ ஒற்றையாட்சி இடமளிக்கவில்லை. அது ஆட்சிமுறையின் இயல்பான குறையென்றும் நாம் சொல்லவில்லை;

ஆட்சிப்போட்டி ஒரு தாசசிப்போட்டியாக அமைந்ததால் 'தமிழர்' பணயம் வைக்கப்பட்டனர். அதுவே தனித் தமிழ் நாடு உதயமாவதற்கு வழிகாட்டியானது!

அந்தத் திருப்பம் பற்றி நாம அடிக்கடி கவலை தெரிவித்து வந்தோம். பரிகாசமாகக் கடித்த பாம்பு, பல பேரறிய மெத்த விங்கிற்று.

நல்லகாலம், அயலவர் என்ற முறையிலும், இலங்கை அரசியலை நன்கு அறிந்தவரென்ற முறையிலும் தமிழ் மக்களின் தனித்துவத்தை நேரில் கண்டுரசித்து அவர்கள் ஒரு சிறந்த சமூகமென்று மாண்ட முறையிலும் இன்று உலகம் போற்றும் இந்திரா காந்தி தமிழ்ப் போராளிகளுக்கு ஆறுதல் அளித்தார். நெருக்கடியைத் தக்க முறையில தீர்த்து வைக்க உறுதிபூண்டார்.

உறுதியென்னும் போது 1983ல் நடந்த கலவரத்தை நேரில் பார்க்கவும் தம்முடைய பாதுகாப்பு அமைச்சரை, வெளி நாட்டு அமைச்சரை அனுப்பி உண்மை நிலையை புரிந்து கொண்டார்;

அப்பாவித்தமிழர் கொலை நிறுத்தப்படவேண்டுமென்று அவர் எழுப்பிய கர்ச்சனையை எவரும் மறக்க முடியாது!

இன்று இந்த நீண்டகால நோய் குணமடைவதானல், போர் நீங்கி சமாதானம் தலையெடுக்க முடியுமானல் 'அன்னை இந்திரா வாழ்க' என்று இந்த நாட்டுமக்கள் அனைவரும் மறைந்த ஆனல் என்றும் வாழ்ந்திருக்கும் அன்னையாரை வாழ்த்தவேண்டும்;

இறுதியில் மறைந்த இந்திரா எங்களைக் கைவிட்டாரோ என்று புலம்பிய நாம், அந்த இருள் அகல அவருடைய புத்திரனையே விட்டுச் சென்றார்.

காந்தி, நேரு, இந்திரா இம்மூவரும் மகாத்மாக்கள். இவர்களின் அடிச்சுவட்டில் இன்று ராஜீவ் இலங்கைக்கு மட்டுமல்ல உலக சமாதானத்துக்கே தம்மை மூற்றாக அர்ப்பணித்திருக்கிறார். இன்று யார் இவருக்கு நிகரானோர்

## இந்திரா சிந்தனைகள்

# "வன்செயல் எமது வாழ்க்கைமுறையல்ல"

மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தமது மனதில் தோன்றிய சில கருத்துக்களை இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்னர், எழுத்து வடிவிலும், உரை வடிவிலும் அடிக்கடி வெளியிட்டு வந்தார். அவற்றில சிலவற்றை இங்கே தருகிறோம்;

★ வன்செயல் எமது வாழ்க்கை முறைக்கு உடன்பட்டதல்ல. அது எமக்கு அந்நியமானது. அதனை தொலைவில் வைத்திருக்கவே நாம் விரும்புகிறோம்.

★ சர்வாதிகாரம் குறுகிய காலமே நீடிக்கக்கூடியது. அது குறுக்கு வழியையே ஏற்படுத்துகின்றது. ஆனல் குறுக்கு வழி, பிரச்னையைத் தீர்ப்பதற்குப் பதிலாக, அவற்றைப் பெருக்குவதையே வாழ்க்கை உணர்த்துகின்றது;

★ எந்த விடயத்தையும் அதன் உச்சநிலையில் வைத்து நோக்குவதையே இந்தியர்கள் தமது சுயபாணியாகக் கொண்டுள்ளனர். ஒன்று நல்லதாயின் அதனை வானுயரப் புகழ்வார்கள் தீயதாயின அதை விட மோசமானது ஒன்றுமில்லை எனக் கொள்வார்கள்.

★ நான் தலைமைத்துவத்தை நம்புவதில்லை. மக்களுக்குத் தலைவர்கள் தேவைப்படாத ஒருசமூகத்தை உருவாக்குவதே எனது நோக்கமாகும்;

★ நான் ஒரு டென் னல்ல தொழில் புரியும் ஒரு நபராவேன்;

★ மூன்று வயதிலேயே எனது பொது வாழ்க்கை ஆரம்பமாகிவிட்டது. பணியாட்களுக்கு முன்னல் நின்று காரசாரமாக உரையாற்றுவது எனக்குப்பிடித்தமான பொழுது போக்காக இருந்தது, எனது விளையாட்டு எல்லாம் அரசியல் சார்ந்ததாகவே இருந்தது ஜோன் ஒவ் ஆர்க்'காகவே என்னை நான் கருதினேன்.

★ என்னிடம் நிறைய யோசனைகள் உண்டு. ஆனல் அவற்றை ஊக்குவிக்கும், வழி நடத்தும் சக்திகள் என்னிடமில்லை ஒரு சிறிய விடயத்துக்காகவும் பெரிய போராட்டம் நடத்த வேண்டியுள்ளது.

★ 1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில் எனது தோல்வியை அறிந்ததும் அதனை எனது தனிப்பட்ட தோல்வியாகவே கருதினேன்: கூடவே ஒரு பெரும் பாறையின் சுமை எனது தோள்களிலிருந்து இறங்கி விட்டது போன்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது.

★ நான் எவரிடமும் ஆலோசனையையோ அறிவுரையையோ கேட்டதில்லை. எனது சொந்த தீர்மானங்களை நானே எடுத்து வந்தேன்:

★ இந்திரா காந்தி இருக்கலாம் அல்லது போகலாம் ஆனல் இந்தியர்கள் ஒரு கோழையைத் தமது தலைவராகக் கொள்ளமாட்டார்கள். என்பது மட்டும் எனது நம்பிக்கை. சோசலிஸப்பாதையில் தம்மை வழி நடத்திச் செல்லாத எவரையும் இந்தியர்கள் தமது தலைவராகக் கொள்ளமாட்டார்கள்



இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தியும், அவரது மனைவி திருமதி சோனியா காந்தியும் மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் 'சக்திதள்' சமாதிக்கு மலர் அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

★ சில நோக்கங்களுக்காகவும், நியதிகளுக்காகவுமே நான் நிலைபெற்றுள்ளேன். நான் ஒரு சிறிய நபராவேன்; என் மீதான அவதூறுகள், தண்டனைகள் என்னை மேலும் உரமடையவே செய்யும்.

★ உயர் மட்டப் பேர்வழிகளுடன் நான் அதிகம் கலப்பதில்லை. அவர்களில் பலர் மூட நம்பிக்கை உள்ளவர்களாக உள்ளனர்.

★ எனக்கு வேண்டியதைச் சாதிப்பேனுயின் மிகவும் பலமுள்ளவளாக இருப்பேன். ஆனல் என்னல் அப்படி முடிவதில்லை நீண்டகாலம் பதவியிலிருந்தும் தலைமை தாங்குகின்றேன் என்று நான் கருதியதில்லை ஆனல மக்களஎன்னை 'பிரதம மந்திரி' என அழைப்பது விகடமாக இருக்கிறது;

★ என்னை ஒழித்துக்கட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனல் இந்தியாவின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் எனது இறுதித்துளிஇரத்தம் இருக்கும் வரையும் நான் பாதுகாத்தே தீருவேன். எனது ஒவ்வொரு துளி இரத்தமும் இந்தியாவைக் கட்டியெழுப்பும் என்பதுஎனது திட நம்பிக்கையாகும்.

தொகுப்பு: அனந்

# இலங்கையின் தமிழர் பிரச்னை

பொதுவாக எப்படி மலையாவது என்பதற்கு இலங்கை இனப்பிரச்னை ஒரு உதாரணமாகும் பலநூற்றாண்டுகளாக சிங்களவரும், தமிழரும் ஒன்றாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள் தமிழர்கள் வடக்கிலும், கிழக்கிலும் வரண்ட பிரதேசத்தில் வாழ்ந்தார்கள். சிங்களவர் ஏனைய பிரதேசங்களில் வாழ்ந்தார்கள் அவர்களுடைய பிரதேசத்தில் ஆறுகளும் மலைகளும் செழிப்பான நிலமும் உண்டு.

பலநூற்றாண்டுகளுக்கு முன்னர் சிங்கள, தமிழ் அரசர்கள் போராடியதைப் பற்றி இப்போது நாம் நினைப்பது மடமையாகும். இப்போது தமிழருக்கும், சிங்களவருக்கும் இது கசப்புணர்வை ஏற்படுத்தக்கூடாது அண்மையில் சண்டைபிடித்தவர்கள் இப்போது எப்படி சக சிநேகிதர்களாக இருக்கக் கூடும் என்பதை ஐரோப்பியர்கள் காட்டியுள்ளனர்.

தமிழருக்கும், சிங்களவருக்குமிடையிலான ஒற்றுமை என்னவெனில் அவர்கள் 500 வருடங்கள் ஐரோப்பாவின் ஆட்சியின் கீழ் இருந்து 40 வருடமி

[9ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறை ஆஸ்பத்திரி
# மாடிக் கட்டடத்தை விரைவில் பூர்த்தியாக்கும்படி உத்தரவு

பருத்தித்துறை, செவ்.

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சுமார் 15லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் சத்திரசிகிச்சைவாட் மாடிக் கட்டிட நிர்மாண வேலைகளை நான்கு மாதத்திற்குள் பூர்த்தியாக்கிவிட வேண்டுமென யாழ். மாவட்ட பிரதிச்செயலாளரும் உள்ளூராட்சி உதவி ஆணையாளருமான திரு. அன்ரன் அல்பிரட் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கம் யாழ். மாவட்டச் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. வி. எம். பஞ்சலிங்கத்திற்கு அறிவித்திருப்பதுடன் நேரில் சந்தித்து கலந்துரையாடியது.

இக்கலந்துரையாடலில் நோயாளர் நலன்புரிச் சங்கத் தலைவர் டாக்டர் கே. சுகுமார், உபதலைவர் திரு. ஏ. என் எஸ் திருச்செல்வம், செயலாளர் திரு. எஸ். வாமதேவன், கணக்குப்பரிசோதகர் திரு. ஆர் சிவபாதசுந்தரம் ஆகியோரடங்கிய தூதுக்குழு சென்றிருந்தது. யாழ் கச்சேரியில் மேலதிக அரசாங்க அதிபர் அலுவலகத்தில் யாழ். மாவட்ட பிரதிச் செயலாளரும் உள்ளூராட்சி உதவி ஆணையாளருமான திரு. அன்ரன் அல்பிரட்

(8 ம் பக்கம் பார்க்க)

## "போராளிகளுக்கிடையில் ஐக்கியம் வேண்டும்"

யாழ்ப்பாணம் புதன்

"போராடும் மக்களுக்கு ஜனநாயகம் வேண்டும். போராடும் மண்ணில் சமாதானம் வேண்டும். போராளிகளிடையில் ஐக்கியம் வேண்டும்" என்று ஈழப்பெண்கள் விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

"எந்தவொரு போராட்டத்திலும் அதாவது தேசவிடுதலைப் போராட்டமாயினும் சரி, வர்க்கவிடுதலைப் போராட்டமாயினும்சரி போராடும் மக்களுக்கு ஜனநாயகம் வேண்டும். இந்தவகையில் ஏற்கனவே அராஜகத்துக்கு எதிராகவும், மக்களது ஜனநாயக உரிமைகளை பறிப்பதற்கு எதிராகவும், 'அராஜகம் இன்றுடன் ஒழியட்டும்' என்ற சுலோகத்துடன் நெருப்புத் தினமான 12-12-85 அன்று நாம் முதன் முதலாக ஊர்வலம் நடத்திருயிபதும் குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் ஏனைய அராஜகங்களுக்கெதிரான போராட்டங்களில் பங்குபற்றியுமிருக்கின்றோம் என்றும் திரு. விஜிதரனை விடுதலை செய்யப்படும்வரை பல்

(8 ம் பக்கம் பார்க்க)


# சின்னமுத்து நோயானது பின்வரும் ஆபத்துக்களை ஏற்படுத்தக் கூடியது என்பது உங்களுக்குத் தெரியுமா?

## போஷாக்கின்மை
## நியூமோனியா
## மூளை வீக்கம்
## காது கேளாமற்போதல்
## இவற்றுடன் அது உயிராபத்தைக்கூட ஏற்படுத்தக் கூடியது.

சின்னமுத்து நோயைச் சாதாரணமான ஒன்றெனநாம் அலட்சியப் படுத்திவிடக் கூடாது. கவனியாது விட்டால் அது உங்கள் பிள்ளையை உடல் ரீதியிலும் உளரீதியிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திவிடக் கூடும்.

தற்போது, நவீன வைத்திய அறிவியல் காரணமாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ள ஒரேவேளை நோய்த்தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டால் உங்கள் பிள்ளையை அதன் வாழ்நாள் முழுவதுமே இக் கொடிய சின்னமுத்து நோயிலிருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும்.

இப்போதே உங்கள் பிள்ளைக்குத் தடுப்பு மருந்தைக் கொடுங்கள். இந்த ஒரே வேளை மருந்து உங்கள் பிள்ளையை வாழ் நாள் முழுவதும் பாதுகாக்கும். உங்களுடைய இக் கடமையை நீங்கள் தவறுது நிறைவேற்றினுல் உங்களுக்கும் உங்கள் பிள்ளைக்கும் ஏற்படக்கூடிய அவசியமற்ற விபரீதத்தைத் தவிர்த்துக்கொள்ள முடியும்.



துரித தடுப்பு மருந்தேற்றல் தேசிய இயக்கம்

சுகாதார அமைச்சு

யுனிசெப் நிறுவனம்

## இன்றே உங்கள் பிள்ளைக்கு தடுப்பு மருந்தை கொடுங்கள்
## தாமதம் செய்தால் தவிக்க நேரிடலாம்.

BJK&E UN 1425


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் பாராட்டு

பருத்தித்துறை, செவ் வரும் பாதுகாப்புப் படையி வடமராட்சிப் பகுதியில் னரின் தாக்குதல்களினுல் தொடர்ந்து நடைபெற்று காயமடைந்து பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்படும் காயமடைந்தோருக்கான மருத்துவ சேவைகளை மிகச் சிறப்பாக மேற்கொண்டு வரும் வைத்தியசாலை டாக்டர்கள், தாதிமார்கள், ஊழியர்களை வைத்

(8 ம் பக்கம் பார்க்க)


# விவசாயிகளே!

உங்கள் வயல்களில் நெல்லுடன் போட்டியிட்டு வளரும்

கோழிச்சூடான், நெற்சப்பி, மொண்டி, குதிரைவாற்புல், ஆடிப்புல், பன்கோரை வகைகளை

● சேர்கோப்பூர் 36% 450 மி. லீ. ரூ. 68/-
3. லீ. ரூ. 410/-

(புரொபனில் — 3, 4 டீ. பி. ஏ.)

பாவித்து சிறப்பாக கட்டுப்படுத்தி கூடிய விளைச்சலை உறுதி செய்துகொள்ளுங்கள்.

பாயர் இரசாயனம் விவசாயிகளின் பெருவிளைச்சலின் உறுதுணை.

BAYER

ஹேகெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு - 10.

இது ஒரு ஜேர்மன் மேற்கு தயாரிப்பு [A 3023]


## போராளிகள் மீதான இந்திய நடவடிக்கை:

# வடமாகாண ஆசிரியர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், புதன்.

தமிழ் மக்களின் நியாயபூர்வமான உரிமைக்காகப் போராடி வரும் அமைப்புகளின் தலைவர்களையும் போராளிகளையும் இந்திய மத்திய அரசு தடுப்புக் காவலுக்கு உட்படுத்திய செயலை வன்மையாக கண்டிப்பதாக இலங்கை ஆசிரியர் சங்க வட பிரதேசக்கிளையான வட மாகாண ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தமிழ்ப்போராளிகளைத் தடுப்புக் காவலில் வைப்பதன் மூலம் இனப்பிரச்னைக்கு உரிய தீர்வைக் கண்டு கொள்ள முடியாது.

தேசிய இனப்பிரச்னைக்கு இனங்களின் சுயநிர்ணய அடிப்படையில் உடனடி அரசியல் தீர்வுகாணப்படவேண்டுமென்று உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேச ரீதியாகவும் வலியுறுத்தப்பட்டுவரும் இவ்வேளையில் அரசு அதனை உதாசீனம் செய்து இராணுவத் தீர்வு காணும் முயற்சியில் இராணுவ நடவடிக்கைகளைப் பெருக்கி மக்களைக் கொன்று குவித்து வருகின்றது (ஒ)

## பருத்தித்துறைப் பகுதி

# பிரதேச பாவனையாளர் பாதுகாப்புச் சங்கம்

பருத்தித்துறை, செவ்.

யாழ் உள்நாட்டு வர்த்தக திணைக்களம் பருத்தித்துறைப் பகுதி பிரதேச பாவனையாளர் பாதுகாப்புச் சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ளது. இப்பிரதேச பாவனையாளர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் புலோலி மெதடிஸ்மிஷன் தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் யாழ். உள்நாட்டு வர்த்தக உதவி ஆணையாளர் திரு எஸ். ரீ மார்க்கண்டு தலைமையில் நடைபெற்றது. பாவனையாளர் சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பருத்தித்துறைப் பிரதேசப் பாவனையாளர் சங்கத் தலைவராகப் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு.வை. வேலும்மயிலுவும் செயலாளராக திரு ஏ. என்.எஸ் திருச்செல்வமும், நூலகப் பொறுப்பாளர், (யாழ் அபிவிருத்திச் சபை, புலோலி உப அலுவலகம்), பொருளாளராக திரு: எஸ் கனகரத்தினமும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் கிராம சேவை அலுவலர் பிரிவுகளின் பாவனையாளர் சங்கங்களின் தலைவர்கள் இப்பிரதேச பாவனையாளர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

கூட்டத்திலே யாழ். உள்நாட்டு வர்த்தக உதவி ஆணையாளர் திரு. மார்க்கண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது: பாவனையாளர் சங்கங்கள் வர்த்தகர்களுக்கு எதிரானவை எனக் கருதிவிடக்கூடாது ஆனல் பாவனையாளர்களைப் பொருளாதாரச் சுரண்டல்களிலிருந்து பாதுகாப்பது பாவனையாளர் சங்கங்களின் தலையாய கடமையாகும். பாவனையாளர் சங்க உறுப்பினர்கள் பாவனையாளர்களைப் பாதிக்கும் நடைமுறைகள் பற்றி வர்த்தகர்களுக்கு ஆலோசனைகளை வழங்க வேண்டும் என்றார்.

பொருளாதாரச் சிக்கல்கள் நிறைந்த இன்றைய நிலையிலேயே பாவனையாளர்களுக்கு உதவக்கூடிய வகையிலே வர்த்தகர்கள் தமது செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். பாவனையாளர்களைப் பொருளாதாரச் சுரண்டல்களிலிருந்து பாதுகாப்பதற்காகவே பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது. பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி பாவனையாளர்களைப் பாதிக்கக் கூடிய நடவடிக்கையில் ஈடுபடுவது சட்டவிரோதமாகும் என மேலும் அவர் சொன்னார்.

## லயன்ஸ் போட்டி முடிவுகள்

சாவகச்சேரி, செவ்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினுல் தென்மராட்சி ரீதியாக நடாத்தப்பட்ட போட்டி முடிவுகள் பின்வருமாறு:

சைக்கிள் ஓட்டம்: முதலாம் பரிசு - திரு வா. செல்லக்கண்டு (கைதடி), இரண்டாம் பரிசு - திரு. ஐ. விஜிசிதம்பி (மந்துவில்), மூன்றுவது பரிசு - திரு சோ. ஜயங்கன் (கைதடி மத்தி).

மரதன் ஓட்டம்: முதலாவது பரிசு - திரு ஐ லட்சுமணன் (கைதடி), இரண்டாவது பரிசு - திரு. செ. செல்லக்கிளி (சாவகச்சேரி), மூன்றுவது பரிசு திரு கி. கிறி (சாவகச்சேரி).

வேகநடை 50 வயதுக்கு குட்பட்டோர்: முதலாம் பரிசு - இ. இராஜகோபால் (சங்கத்தானை), இரண்டாவது பரிசு - திரு. ஏ. பரமேஸ்வரன் (சாவகச்சேரி), மூன்றுவது பரிசு - திரு இ. தியாகராசா (கெற்பேலி).

வேகநடை 50 வயதுக்குமேற்பட்டோர்: முதலாவது பரிசு- திரு .கு படவீரசிங்கம் (நுணுவில் மேற்கு) இரண்டாவது பரிசு - திரு. க .கார்த்திகேசு (மீசாலை தெற்கு). மூன்றுவது பரிசு - திரு ச. சபாபதி (நுணுவில் கிழக்கு).

இப்போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை சாவகச்சேரி உதவி அரச அதிபர் திரு. க. துரைராசா வழங்கினுர்.

லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் பே. பிலிப்ஸ் தலைமையில் போட்டிகள் ஆரம்பமாகின.

## அ. போ. குழு உதவி

சாவகச்சேரி, செவ்.

திருமலை, சாம்பல்தீவு போன்ற இடங்களிலிருந்து அகதிகளாக அச்சுவேலி, கரவெட்டி மற்றும் பகுதிகளில் இருக்கின்ற அகதிகளுக்கு அறவளிப் போராட்டக்குழு ஒரு வார காலத்துக்கான உணவுப் பொருட்களை வழங்கியுள்ளது.

இந்த அகதிகளுக்கு அரசின் உதவிகள் நிறுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது: (ஒ)

## ஆண்டு விழா


சாவகச்சேரி, செவ்.

நுணுவில் மேற்கு ஆரம்ப சுகாதார நிலையத்தின் முதலாவது ஆண்டு சேவை நிறைவு விழா டிசம்பர் மாதம் 20ம் திகதி நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பொதுக்கூட்டம், கலாசார நிகழ்ச்சிகள் என்பன இடம்பெறவுள்ளதாக ஆரம்ப சுகாதார நிலையத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஒ)


# பவர்ஸ்

## வீட்டுத் தோட்ட உர வகைகள்




தேவையான விசேட உரத்தின் இலக்கத்தைக் குறிப்பிட்டுப் பெறுங்கள்.

இல. 1. தாவர A வர்க்கம்
இல. 2. தாவர B வர்க்கம்
இல. 3. பழ மரங்கள்
இல. 4. இச்சிலி மரங்கள்
இல. 5. வாழை, அன்னுசி
இல. 6. விசேட பப்பாசி
இல. 7. விசேட உருளைக்கிழங்கு
இல. 8. விசேட மிளகாய்
இல. 9. விசேட வெண்காயம்
இல. 10. மலர் – பொது
இல. 11. விசேட புற்றரை
இல. 12. ரோசா – செவ்வரத்தம்பூ
இல. 13. அந்தூரியம், பெக்கோனியா
இல. 14. மலர் – "விசேடம்"
இல. 15. விசேட வெற்றிலை
இல. 16. விசேட திராட்சை
இல. 17. விசேட ஸ்ரோபறி
இல. 18. தெங்கு, செவ்விளந்தென்னை விசேட உரம்

A B C

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
தபாற்பெட்டி இல. 11 கொழும்பு.

MASTERS ABC 2/83

(A-1365)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நேற்றைய தொடர்ச்சி)

# சைவமும் தமிழும் தழைக்க முயற்சி செய்தவர்

### பேராசிரியர் அ. சின்னத்தம்பிபற்றி துணைவேந்தர் வித்தி

## தமிழ் பல்கலைக்கழக பிரசாரகர்

இலங்கைத் தமிழரின் வரலாற்றிலே தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தோற்றமும், செயற்பாடுகளும், இயக்கம் மேற்கொண்ட பணிகளும் வரலாற்று முக்கியம்வாய்ந்தவை. அந்த இயக்கத்தின் முன்னோடிகளின் ஒருவராகவும் அதன் பிரசாரக் குழுப்பின் பொறுப்பாளராகவும் இறுதிவரை அதன் உந்துகோலாகவும், அதன் தூணாகவும் விளங்கியவர் பேராசிரியர் சின்னத்தம்பி ஆவர்.

அரசியல் ஈடுபாடில்லாத கல்விமான்களும் தொழிலதிபர்களும், அபிமானிகளும் மேற்கொண்ட தீவிர முயற்சியாக 1956ம் ஆண்டு ஜூன் மாதம் 6ம் திகதி தமிழ்ப் பல்கலைக்கழகம் தோற்றம் பெற்றது தமிழ் பேசும் மக்களுக்கென்றொரு பல்கலைக்கழகம் நிறுவுதல், எல்லாத் துறைகளிலும் உயர் கல்வியைத தமிழ் மாணவர் பெற வசதி செய்தல் என்ற இரு முக்கிய நோக்கங்களோடு நிறுவப்பட்ட இவ்வியக்கம், மாவட்டந்தோறும் பிரசாரம் செய்து, பிரதேசக் குழுக்களையும் அமைத்து, ஏறக்குறையமூவாயிரம் அபிமானிகள் உறுப்பினராகச் சேர்ந்து கொண்டனர்.

இந்த இயக்கத்தில் கடைசி வரை பின்வாங்காது நின்று அதனைத் தாங்கி நின்ற பேராசிரியர் சின்னத்தம்பி அவர்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது முதலாவது பட்டமளிப்பு விழாவில் விஞ்ஞான கலாநிதிஎன்ற கௌரவப் பட்டத்தினை வழங்கியது பொருத்தமாகும். அப்பட்டத்திற்கு அவரை அறிமுகப்படுத்திய அவரது அபிமானத்திற்குரிய மாணவரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது மகப்பேற்று மாதர் நோய் பருத்துவப் பேராசிரியருமான ம. சிவசூரியர் அவர்கள் தமது குருவை அறிமுகம் செய்யும்போது மகப்பேற்று மாதர் நோய் பருத்துவதுறைகளில் இவரின் சாதனைகளையும் பங்களிப்பினையும் கௌரவிக்குமுகமாகப் பிரித்தானிய மகப்பேற்று மாதர் நோய் வேத்தியல் மருத்துவக் கல்லூரி 1958ம் ஆண்டு இணையுரிமைப் பரிசிலை இவருக்கு வழங்கியதனைப் பெருமையுடன் எடுத்துக் கூறித் தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கப் பாதுகாவலராகிய பேராசிரியருக்கு இப்பட்டத்தினை வழங்குமாறு கேட்பதிலே தாம் மகிழ்ச்சியடைவதாகக் குறிப்பிட்டார்.

## சமயத்தொண்டு புரிந்தார்

பேராசிரியர் சின்னத்தம்பி அவர்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியராகவிருந்த காலத்தில் மருத்துவத்துறை இந்து மாணவரைக் கல்வித் தொண்டிலும் சமயத் தொண்டிலும் கலைத்தொண்டிலும் வழிநடத்தியமை சிறப்பாகக் குறிப்பிடவேண்டியது. தமிழ்ப் பேசும் மக்கள் ஈழத்திலே பல நூற்றாண்டுகளாகப் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த பகுதிகளுள் வடமேற்குப் பகுதியும் ஒன்றாகும். நீர்கொழும்பு தொடக்கம் புத்தளம் வரையுள்ள நிலப் பரப்புப் பழங்காலத்திலே தமிழ் இந்துக்கள் வாழ்ந்தபகுதியாகத் திகழ்ந்தது. பண்டைக் காலத்திலே இந் நிலப்பரப்பிலே தமிழ் முழங்கிக் கொண்டிருந்தது மேன்மைகொள் சைவமதம் பொதுமக்களின் சமயமாக விருந்துவந்தது.

பேராசிரியர் சின்னத்தம்பி அவர்கள் கொழும்பு பல்கலைக்கழக இந்து மாணவர் உதவியுடன் சிலாபத்தில் முந்தல், குசலை, மருதங்குளம் முதலிய இடங்களிற் சைவப் பாடசாலைகளை நிறுவி அப்பகுதிகளிலே சைவமும் தமிழும் மறையாதிருக்க முயற்சி செய்தார்.

பேராசிரியரின் வழிநடத்தலில் வடமேற்கு மாகாணத்தில் சமயத் தொண்டும் கல்வித் தொண்டும் செய்து வந்த கொழும்புப் பல்கலைக்கழக இந்து மன்ற மாணவர் மருதங்குளம், குசலை, நாகக்காசேனை, உடப்பு முன்னேஸ்வரம் ஆகிய இடங்களில் நாட்டுக்கூத்துக்களை அரங்கேற்றி வந்த காலத்தில் வீடு வீடாகச் சென்று கூத்து ஏட்டுப் பிரதிகளையும் சேர்த்துப் பேராசிரியரிடம் கொடுத்தனர். மட்டக்களப்பில் ஆடப்படும் அலங்கார ரூபன் என்னும் தென்மோடி நாடகத்தை ஏட்டிலிருந்து 1962-ம் ஆண்டு நான் அச்சிட்டு வெளியிட்டது பேராசிரியருக்குத் தெரியும். எனவே சிலாபப் பகுதியில் மருதங்குளத்திற் கிடைத்த 'மார்க்கண்டன் நாடகம்' 'வாளபிமன் நாடகம்' என்னும் இரு நாடகங்களின் ஏட்டுப் பிரதிகளையும் என்னிடம் தந்து, அவற்றை வெளியிடும்படி கேட்டார். இவ்விரு நாடகங்களும் 1963-ம் ஆண்டு பிற்பகுதியில் நூல் வடிவாகச் சிவத்தம்பியினால் பதிப்பிக்கப்பட்டன. இவ்விரு நூல்களையும் சேர்த்து வெளியிட்டவர்கள் இலங்கைப் பல்கலைக்கழக வைத்தியப் பகுதி இந்து மாணவர் சங்கத்தினர், பணவுதவி செய்து இதனைச் செயற்படுத்தியவர் பேராசிரியர் சின்னத்தம்பி செய்தமகத்தான தொண்டு ஸ்ரீலஸ்ரீ பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களின் கந்தபுராணம், தஷகாண்ட உரையைப் பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் மன்றத்தினைக் கொண்டு வெளியிட்டதாகும்.

பேராசிரியருக்கும் எனக்குமிடையே ஏற்பட்ட தொடர்பு 40 ஆண்டுகளுக்கும் மேலானது. என்னை ஆளாக்கின ஆசான் பேராசிரியர் கணபதிப்பிள்ளை மூலமே முதலிலே தொடர்பு ஏற்பட்டது. அவர்கள் இருவரும் குழந்தை மனம் படைத்தவர்கள். சூதுவாதறியாதவர்கள். எளிமையான வாழ்க்கையை நடத்தியவர்கள். பெரிய பதவிகளை வகித்தபோதிலும் தமது மண்ணை மறவாதவர்கள். தமது மாணவர் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டவர்கள். பேராசிரியர் சின்னத்தம்பி, பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாடகங்களைப் பார்த்து அவரது பேச்சுத் தமிழைச் சுவைத்தவர். இதனால் எனக்கும் அவருடன் நெருங்கிய தொடர்பேற்பட்டது.

1974ம் ஆண்டில் உலகப் பிரசித்தி பெற்ற நான்காவது தமிழாராய்ச்சி மகாநாட்டினை அரசின் தடைகளுக்கும் எதிர்ப்புக்களுக்கும் மத்தியில் நாம் யாழ்ப்பாணத்தில் நடத்திய பொழுது, பல தமிழ்ப் பெரிய 'புள்ளிகள்' ஒதுங்கி நின்றனர், பேராசிரியர் சின்னத்தம்பி தொடக்கத்திலிருந்து பேராதரவு தந்து, மகாநாடு தொடங்கி முடியும்வரை எம்மோடு உழைத்தவர். மகாநாட்டில் இரு குழு அரங்குகளுக்குத் தலைமை தாங்கிச்சிறப்பாக நடத்தியவர் மட்டக்களப்பில் பிராந்திய தமிழாராய்ச்சி மகாநாட்டினை 1976ம் ஆண்டு நாம் நடாத்தியபோது அம்மகாநாடு முடியும்வரை அங்கு வந்து தங்கி ஊக்கமளித்தவர்.

## நூல்களை அன்பளிப்புச் செய்தவர்

நான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராக நியமிக்கப்பட்டபோது என்னைப் வாழ்த்தி ஆசி வழங்கியவர்.

ஒருமுறை அவரிடம் அவரின் நூல்களை யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்திற்கு அன்பளிப்புச் செய்யும்படி கேட்கச்சென்றிருந்தேன். அப்போது அவர் நான் கட்டியெழுப்பிய மானிப்பாய் இந்துக்கல்லூரி நூலகத்திற்குப் பல அரிய நூல்களை முன்னை அதிபர் முத்துவேல் மூலம் கொடுத்துவிட்டேன். ஆயிரத்துக்கு மேற்பட்ட சமய இலக்கிய நூல்களை மானிப்பாய் நகரசபை நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்து விட்டேன்' என்று கூறினார். தான் பிறந்த ஊரிலே தன்னை ஆளாக்கிய அன்னையின் ஊரிலே அவருக்கு மிகுந்த பற்று இருந்தது. கடைசி நாட்களை யாழ்ப்பாணத்திலேயே கழிக்க வேண்டுமென்று உறுதி. அவரது தள்ளாத நிலையிலும் யாழ்ப்பாணத்திலே வாழ்ந்து இறக்கும் வரை நூலாக்கம் செய்யும் பணியில் ஈடுபடச்செய்தது. எப்பொழுதும் எழுதிக்கொண்டிருந்த கைகள் இப்பொழுது ஓய்ந்து விட்டன. தமிழினத்திற்கு மருத்துவத்துறையில் தமிழில் நூலாக்கத்துறையில், சமய இலக்கிய நூல்களை வெளியிடும் துறையில், சமூகத் தொண்டில் ஈடிணையற்று விளங்கிய ஒருவரை நாம் இழந்துஇன்று தவிக்கின்றோம்.

அவர் இறைவன் அடி சேர்ந்ததும் அவரின் பல்துறைப் பணிகளுக்கேற்ற அஞ்சலி செலுத்தப்படவில்லை. இந்த இழிவு நிலையைச் சீர் செய்யும் வகையில் கொழும்புத் தமிழ்ச் சங்கம் இந்த நினைவுப்பேருரையை ஒழுங்கு செய்திருப்பது அன்னாரின் சேவைக்கு நாம் நன்றிசெலுத்தும் நன்றிக்கடனின் ஒரு துளியாகும். என்னை இந்நினைவுப் பேருரையை நிகழ்த்தும்படி கேட்டபோது முதலிலே தயங்கினேன் ஆனால் என்னோடு அன்பினாலும் தொண்டுகள் பலவற்றினாலும் இணைந்து என் அபிமானத்திற்குரிய இப்பெருமகனின் நினைவாகச்செய்யப்படவேண்டியவற்றிற்குக் கால்கோளாக இந்நினைவுப்பேருரை அமையலாம் என்ற நம்பிக்கையுடன் உரை நிகழ்த்த ஒப்புக் கொண்டேன்.

நினைவுப் பேருரையுடன் நாம் நிறைவுபெற்றிருக்கமுடியாது அவரின் நினைவாக இரு பரிசுகளைத் தமிழ்ச் சமுதாயம் செய்யலாமென நினைக்கின்றேன். ஒன்று சின்னத்தம்பி நினைவுக்கட்டுரைத் தொகுதி நூல் வெளியிடுவது. இதனை நினைவுத் தொகுதி நூல்களை வெளியிடுவதில் அனுபவம் உள்ளவர்களும், அவர்களின் மாணவர்களும் செய்ய முன்வரவேண்டும். அவரைப் பற்றிய தகவல்களை, அவரது பணிகளைப் பரவலாக எடுத்துக் கூறுவதாகவும், சமயம் கல்வி, மருத்துவம் போன்ற துறைகளில் ஆய்வு நடத்துவோரின் ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கியதாகவும் இந் நூற்தொகுதி அமைதல்

[8-ம் பக்கம் பார்க்க]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நடுத்தரக் கல்லூரிகள் வன்னியில் அமைய வேண்டும்"

வவனியா, செவ்

"சமூக கலாசார பண்பாடு முன்னேற்றமடைய நடுத்தர கல்லூரிகள் வன்னிப்பகுதியில் அமைக்கப்படவேண்டும்என்று யாழ் பல்கலைக்கழக கல்வியற் புலம்தலைவர் பேராசிரியர் பர சந்திரசேகரம் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

பாவற்குளம் படிவம் 2 இல 1 மகாவித்தியாலய பரிசளிப்பு விழாவில் வைர உரை நிகழ்த்துகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். பேராசிரியர் மேலும் கூறியதாவது:

"மாணவர்களது உயர்வே ஆசிரியர்களினது உயர்வாகும் மாணவர்களை உற்சாகப்படுத்தும் நோக்குடனேயே பரிசளிப்பு விழாக்கள் நடத்தப்படுகின்றன.

"உடல் உழைப்பாளிகள், வீரம் உடையவர் வன்னியர். ஒல்லாந்தருடைய ஆட்சிக் காலம் மட்டும் வன்னியர் குறுநில மன்னர்களாக நம் நாட்டில் எழுச்சிபெற்று திகழ்ந்துள்ளனர்.

"எமது நாட்டில் ஏறக்குறைய 5 வயதுக்குட்பட்ட ஒரு லட்சம் மாணவர்கள் எதுவித கல்வியும் இன்றி காணப்படுகின்றனர். கல்வித் தரத்திற்கு இது இழுக்காகும்.

"கிழக்கிழங்கை வன்னி, மொனருகலை பகுதிகளில் 40 சதவீதமான இளைஞர்கள் பாடசாலை செல்லாது உள்ளனர் என ஆய்வின் மூலம் அறியமுடிந்தது.

"சுமார் 900 தோட்டப் பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றபோதும் தனி ஒருவர் ஆசிரிய பாடசாலையாகவே அவை இயங்குகின்றது இத தீர்க்கப்படவேண்டும். சமூக கலாசார பண்பாடுகள் முன்னேற்றமடைய வேண்டுமானல் வன்னிப்பகுதியிலும நடுத்தர கல்லூரிகள் நிறுவப்பட வேண்டியது அவசியமாகும்

"கல்வி என்பது அறிவியல் துறையிலும், அழகியல் துறையும் இணைந்ததே ஆகும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துடன் இணைந்ததான கல்லூரி ஒன்று வன்னியிலும் உருவாக்கப்பட வேண்டும்".

மேற்படி பாடசாலை அதிபர் திரு. என். கே. தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் கல்விப்பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம், கல்வி அதிகாரி திரு.எஸ். அருளானந்தன், செட்டிகுளம் பிரதேசசபைத் தலைவர் திரு. எஸ். அருள்ராஜா ஆகியோரும் உரையாற்றினர்கள்.

மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றது. (எ)

## நோயாளர்

(6 ம் பக்கத் தொடர்ச்சி)

தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கம் பாராட்டியுள்ளதுடன் நன்றியும் தெரிவித்துள்ளது.

ஹெலிக்கொப்டர் வைத்தியசாலையைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்த போதிலும் அங்கு கொண்டுவரப்பட்ட நோயாளர்களுக்கான சிகிச்சைகளை துணிவுடனும் விரைவாகவும் மேற் கொண்டிருந்தது இவர்களின் சேவை மனப்பான்மையை வெளிப்படுத்தியது. காயப்பட்டவர்களுக்கான இரத்தம் தேவைப்பட்ட போது வைத்தியசாலையின் உதவி வைத்தியப் பயிற்சி நெறி மாணவர்களும் ஆரம்ப சுகாதாரக் கவனிப்பு நிலையத் தொண்டர்களும் முன்வந்து இரத்த தானம் செய்ததும் பாராட்டப்பட வேண்டியதாகும் என்றும் வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கம் தெரிவித்துள்ளது. [ஒ]

## சைவமும்

(7ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். இரண்டாவதாக நான் விடுக்கும் பணிவான வேண்டுகோள், அவரின் ஞாபகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் மகப்பேற்று மாதர் நோய் மருத்துவத்துறையிற் புலமைப்பரிசில் வழங்குவதற்கேற்ற மூலப்பணம் சேர்த்துக் கொடுத்தல் ஈழத்திலும் வெளிநாடுகளிலுமுள்ள அவரின் மாணவரும், அவரின் பிள்ளைகளும், அபிமானிகளும் மனம் வைத்தால் இவ்விரு நன்றிக்கடன் செயல்களைச் செய்து அவரின் நினைவு நிலைபெறச் செய்தோம் என்ற மனநிறைவு ஏற்படும். 1986ம் ஆண்டு பங்குனி, சித்திரை இதழாகவெளி வந்த ஊற்று ஏட்டில் டாக்டர் கு. சுகுமார் 'மண்ணின் மைந்தன்' என்ற புகழ்ப்பெயர்சூட்டிய பேராசிரியர் சின்னத்தம்பியின் பணிகள் அவர் தாம் பிறந்த மண்மேற்கொண்டிருந்த பற்று, எம்மினத்திற்கு வழிகாட்டுவனவாக அமைய வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்தித்து இந்நினைவுப் பேருரையை நிறைவு செய்கின்றேன். (வா)

# கைதான தொழிலாளர்கள் விடுதலை செய்யப்படவில்லை

வவனயா, செவ்

வவனியா வேப்பங்குளம் மரக்காலையில் வைத்து கைது செய்யப்பட்ட 9 தொழிலாளிகளும் இன்னமும் விடுவிக்கப்படவில்லை.

மேற்படி மரக்காலை ஆயுதப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தொழிலாளிகள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் வன்னி ஆயுதப்படை பிரதான முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள் என அறியப்படுகின்றது.

இந்த மரக்காலையிலிருந்து பெரும்தொகையான மரப் பலகை வகைகள், தீராந்தி வகைகள் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டு முகாமுக்கு ஏற்றிச் செல்லப்பட்டுள்ளன.

இம் மரக்காலைக்கு முன்பாகவுள்ள வீடொன்றில் தங்கியிருந்து வவனியா நீர்ப்பாசன இலாகாவில் பணிபுரியும் ஊழியர் ஒருவரும் விசாரணைக்காக கைது செய்யப்பட்டு முகாம் கொண்டு செல்லப்பட்டார். அவரும் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. (எ)

## போராளிகளுக்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கலைக்கழக மாணவர்களின் நியாயவான போராட்டங்களுக்கு எமது ஆதரவை வழங்குவோம்" என்றும் குறிப்பிட்டுள்ளது.

## நிரந்தரக் கட்டடம்

பண்டத்தரிப்பு, செவ்.

யாழ் அபிவிருத்திச் சபையின் காரைநகர் வடக்கு கிராம உப அலுவலகத்திற்கு நிரந்தரக் கட்டிடம் ஒன்று விரைவில அமைக்கப்படவுள்ளது.

## பருத்தித்துறை...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலின் போது யாழ் மாவட்ட உதவிச்செயலாளர் திரு. எஸ். பரமநாதன் யாழ். மாவட்ட பொறியியலாளர் உட்பட மற்றும் அதிகாரிகள் பிரசன்னமாகவிருந்தனர்.

வைத்தியசாலையில் 15 லட்சம்ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் மாடிக் கட்டிட நிர்மாண வேலைகள் ஸ்தம்பித்திருப்பதனல் பெரும் பாதிப்பேற்பட்டுள்ளதை நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் சுட்டிக்காட்டியதையடுத்தே யாழ். மாவட்ட பிரதிச் செயலாளர் திரு. அன்ரன் அல்பிரட் இக்கட்டிடம் 4 மாதங்களுக்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்ற உத்தரவைப் பிறப்பித்தார்.

இச்சந்திப்பின்போது வைத்தியசாலையில் கிளினிக்குகள் நடத்தப்படுவதற்கு சுமார் 5 லட்சம் ரூபா செலவில் கட்டிடம் ஒன்றை அமைக்க வேண்டிய முக்கியத்துவத்தையும் வைத்தியசாலைக்கு 'எக்ஸ்றே' இயந்திரமொன்றை வருவிக்க வேண்டிய முக்கியத்துவத்தையும் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் எடுத்துக் கூறினர். (ஒ)

வசாவிளான்
மத்திய மகாவித்தியாலயம்
ஆண்டு - 7 (தரம் - 6)
அனுமதி - 1987
விண்ணப்ப முடிவு திகதி: 15-12-1986.
விண்ணப்பங்கள் உரியபடிவத்தில் பூர்த்திசெய்து பின்வரும் முகவரிக்கு அனுப்புக:
அதிபர்,
யா/வசாவிளான் ம. ம. வி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு.
[C-3094]

லங்கெம் M 50 களைகொல்லி

விவசாயப் பெருமக்களே!

உங்கள் நெல் வயல்களில் காணப்படும் அகன்ற இலைக் களைகளை முற்றாக அழிக்க லங்கெம் M 50ஐ பாவியுங்கள்.

நீண்டகாலமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா விவசாயிகள் பாவித்து பயன் அடைந்த ஒரே களைகொல்லி லங்கெம் M 50.


400 M. L. 38-00
4 Litre 325-00

லங்கெம்
விவசாயிகளின் தோழன்

விபரங்களுக்கு:
லங்கெம் பிராந்திய விற்பனை நிலையம்,
219, 221, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23454

HEAD OFFICE:
Lankem Ceylon Ltd.,
760, BASELINE ROAD, COLOMBO - 9
Telephone:- 598292 — 6

LANKEM
Lankem M-50
MCPA
Active ingredient: Potassium salt of MCPA
400 g/litre




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிர்ச்சியால் கர்ப்பிணி மரணம்

பருத்தித்துறை, செவ். பொம்பர், விமானம், மோட்டர்ஷெல் ஹெலிகாப்டர் தாக்குதல்களினால் அதிர்ச்சியடைந்த நிறைமாதக்கர்ப்பிணிப்பெண் ஒருவர் இரத்தப்பெருக்கினால் மரணமடைந்தார். அவரால் பிரசவிக்கப்பட்ட ஆண் குழந்தையும் இறந்து விட்டது.

தொண்டமானாற்றைச் சேர்ந்த திருமதி சிவகுரு இரதிவதனை (வயது 25) என்ற இளம் பெண்ணே அதிர்ச்சியினால் மரணமானவராவர்.


# மண மங்கல அரங்கம்

# Mana Mangala Arangam

## திறப்பு விழா

19-11-1986 புதன்கிழமை பகல் 12-00 மணி.

அன்பர்களே! தாங்கள் விரும்பிய மணமகனையோ மணமகளையோ தெரிந்து கொள்வதையிட்டு கவலையடையாதீர்கள். இன்றே எம்முடன் தொடர்புகொள்ளுங்கள். மனத்திருப்தியுடன் தங்களுக்குச் சேவை செய்யக் காத்திருக்கின்றோம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

**மண மங்கல அரங்கம்,**
மே/பா யாழ். பீச் இன் இலக்கம்-10.
139, பீச் றோட், யாழ்ப்பாணம்.

[C-5832]



# NEW ADMISSION

## Jaffna College Technical Institute, Vaddukoddai.

(A) B Eng-PROFESSIONAL Degree Course E C. E. (Lon Part I and II (A) (B) (C) Full time course of study in Engineering subjects, leading to Professional College Degree B. Eng award, will commence in January 87 During this 4 year/8 semesters course candidates could successfully complete E. C. E (Lon) Part I and II, with approved practicals + project work

Students of both sex below 22 years of age with minimum 3 G. C. E. (A/L) passes including Applied and/or Pure Mathamatics can apply

Fees: Rs 2500/- per semester.

Apply on forms (Rs. 10/-) available at office, to Director, before 15th December, 86. Limited Studentship assistance to deserving students are available.

[A 3088] DIRECTOR.



## யாழ்நகரில் ஓர் புதிய உதயம்

எத்தனை கோடி பணமிருந்தாலும்
நிம்மதிவேண்டும்....

# அமைதியிழந்து தவிக்கின்றீர்களா?

- ★ குடும்பச்சிக்கல்கள்
- ★ இளைஞர் பிரச்சினைகள்
- ★ தற்கொலை நாட்டம்
- ★ பாலியற் பிரச்சினைகள்
- ★ மதுஅடிமை நிலை
- ★ புகைத்தல் பழக்கம்
- ★ போதைவஸ்து அடிமைநிலை

இவற்றிலிருந்து மீட்சிபெற அறிவுபூர்வமான, ஆலோசனைகள் பரிவுடனும் அந்தரங்கமாயும் வழங்கப்படுகின்றன.

**ஆலோசனையாளர் குழு;**

- ★ டாக்டர் க. சுகுமார் M.B.B.S. (Cey)
- ★ அருட்திரு. எஸ். டேமியன் M.A. (Hon) Coun. Psy. (Ottawa)
- ★ அருட்திரு. எஸ். ஜே. கதிர்காமர் Dip. in Coun. Psy. (Vellore)

**ஆலோசனை நேரம்:**

ஞாயிறு மாலை — 2.30 - 5.30
வியாழன் மாலை — 2.30 - 5.30
மற்றைய நாட்களில் பதிவு செய்தல் மட்டும் 8.30 முதல் 5.30 வரை

# உளவள ஆலோசனை நிலையம்

19/3, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
[வெள்ளி விடுமுறை தினம்]

A Creation of Joe Egerton's Zenith Ads. (A3111)


பல்கலை அனுமதிக்கு

## அனைத்து மாணவரும் தகுதி பெற்றனர்

யாழ்ப்பாணம், புதன்

ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்திலிருந்து கடந்தாண்டு நடைபெற்ற க. பொ. த. (உ. த) பரீட்சையில் கலைத்துறைக்குத் தோற்றிய அனைத்து பதின்மூன்று மாணவர்களும் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் தகுதி பெற்றுள்ளனர்.

முல்லைத்தீவு கல்வி மாவட்டத்தில் உயர்தரப் பரீட்சைக்கு கலைத்துறையில் தோற்றிய அனைவரும் சித்தியடைந்த ஒரேயொரு மகா வித்தியாலயம் இதுவாகும்.

மிகவும் கஷ்டமான சூழலில் அமைந்துள்ள பாடசாலையொன்றில் இவ்வாறு பரீட்சை முடிவைப்பெற உழைத்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களை மாவட்டக் கல்விப்பணிப்பாளர் ஜனாப். எம். எம். மன்சூர் வெகுவாக பாராட்டியுள்ளார்.

இதனையொட்டி பாடசாலை அபிவிருத்தி சங்கமும், பழைய மாணவர் சங்கமும் அதிபர், ஆசிரியர், சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவித்து விருந்துபசாரமொன்றை நடாத்தவுள்ளனர். (சி)

## பின் முற்றுக்கும் கட்டளை அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

பொலிகண்டியைச்சேர்ந்த மரணசாதனமில்லாது இறந்த சின்னத்தம்பி சின்னராசாவின் சொத்துகள் தொடர்பாக:

சின்னத்தம்பி சின்னராசா - இறந்தவர்

மரணசாதன நிர்வாகம் } இல. T/1246

சின்னத்தம்பி சின்னராசா கைம்பெண் செல்வரத்திரவியம் பொலிகண்டி. - மனுதாரி

எதிர்

பராயமற்றவர்கள்

1. சின்னராசா ஞானவேல்
2. சின்னராசா சக்திவேல்
3. சின்னராசா மகள் ஞானகலா
4. சின்னராசா மகள் சுகிகலா
5. சின்னராசா மகள் சுசிகலா
6. சின்னராசா குமாரவேல்
7. சின்னராசா மகள் உதயகலா
8. இரசா சந்திரசேகரம்

யாவரும் பொலிகண்டி - பிரதிவாதிகள்

மேலே இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டு மார்கழி மாதம் 19ம் திகதி முற்பகல் 9-45 மணிக்கு இந்நீதிமன்றின் முன்னர் தோற்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

மன்றின் கட்டளைப்படி,
சண்முகம் நடராசா
பதிவாளர்.

1986ம் ஆண்டு ஆடி மாதம் 23ம் திகதி.

வரைவு:

பொ. குமாரசாமி
மனுதாரின் சட்டத்தரணி.
[C 5818]

## இலங்கையின்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு முன்னர் தான் சுதந்திரம் பெற்றனர். அப்போது இந்தியாவைப் போல் ஜாதி பேதங்கள் இருக்கவில்லை திறமையுள்ள ஆட்சியாளர்கள் எல்லோரையும் சேர்த்து தேசத்தை அபிவிருத்தி செய்யத் தொடங்கியிருப்பார்கள் ஆனால் எல்லாத் திசையிலும் தவறு செய்துள்ளனர். தமிழர்விட்ட பிழைகளை மறைக்கக் கூடாது. ஆனால் சிங்களவர் பெரும்பான்மை ஆனவர்களாதலால் அநேக பொறுப்பு பெரும்பாலும் அவர்களையே சாரும்.

மலையக மக்களை என்ன செய்தார்கள்? மலையகத்திலே தேயிலைத் தோட்டத்தில மிகவும் கஷ்டப்பட்டு வேலை செய்ய சிங்களவர்களால் முடியாதாகையால் பிரித்தானியர்கள் தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்களை நியமித்தனர். தமிழ் தொழிலாளர்கள் 100 வருடங்களுக்கு மேலாக அங்கு வாழ்ந்து வந்தனர். இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் சோல்பரித் திட்டத்தின் குறிப்பின்படி இவர்களில் 80% ஆனவர்களே நிரந்தரமாக வாழ்பவர்கள். பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் அவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது ஆனால் இலங்கை அரசாங்கம் உடனடியாக அவர்களின் அவ்வுரிமையை நிராகரித்தது. ஆனால் இலங்கைத் தமிழர்களுக்கெதிராகவும் நடவடிக்கைகள் எடுத்தது. அப்போது அதிகமாகத் தமிழ் இளைஞர்களுக்குதான் சம்பள வேலை கிடைத்தது. சிங்களம் முதன்மை மொழி என்றும் பல்கலைக்கழகத்தில் தரப்படுத்தலும், உயர் கல்விக்குத் தடையாயிருந்தன. இதனால் படித்தும் வேலை கிடையாமல் மனம் வெறுத்த இளைஞர்கள் உருவாகினார்கள். சிங்களவரின் பிழையான சட்டங்களை எதிர்த்தால் தமிழர் சிங்களக் காடையர்கள் மூலம் தாக்கப்படுவர் அப்போது பாதுகாப்புப் படைகள் உதவமாட்டார்கள். 58, 64, 71, 77, 81ம் ஆண்டுகளில் இலங்கைத் தமிழரும், மலையகத் தமிழரும் சிங்களவரால் தாக்கப்பட்டனர். 1983ல் எவரும் எதிர்பார்த்திராத போது தமிழரின் உடமைகளுக்குத் தீவைப்பது வேறுபல மக்களுக்கு அறிமுகப்படுத்தியது.

கடந்த 3 வருடங்களுக்கு மேலாக இலங்கை அரசு தமிழருக்கெதிராக தாக்குதல்களை நடத்தி வருகிறது. இலங்கை ஜனாதிபதி ஆரம்பத்திலிருந்தே கூலிப் படையினரை இஸ்ரேலிலிருந்தும் பிரித்தானியாவில் இருந்தும் இறக்குமதிசெய்துள்ளார்கள் மேலும் பாகிஸ்தானின் உதவியுடன் படைகளுக்கு வேண்டிய பயிற்சியும் தேவையான ஆயுதமும் வழங்கப்படுகிறது ஜனாதிபதி அவர்கள் மார்க்சிச பயங்கரவாதிகள் இலங்கை முழுவதையும் கைப்பற்ற நினைக்கிறார்கள் என்று திரு. றேகன் அவர்களின் உதவியைப் பெறுவதற்காக அவரிடம் கூறியுள்ளார். பயங்கரவாதியை ஒழிப்பதற்கு இலங்கை அரசு ஒவ்வொரு வருடமும் 10.000 மில்லியன் ரூபா செலவழிக்க வேண்டியுள்ளது.

ஆரம்பத்திலிருந்த பாம்புப் பொந்து என்னவாயிற்று? ஒரே ஒரு வேண்டுகோள் மாத்திரம் விடுக்கப்பட்டது: தமிழர் தாம் பலநூற்றாண்டுகளாக தம் சொந்தவிவகாரங்களை தாமே தீர்த்தனர். இந்த சிறிய வேண்டுகோள் இலங்கை மக்களின் ஒற்றுமையையும், ஆட்சியையும் சுதந்திரத்தையும் எந்த விதத்திலும் பாதிக்காதென எம்மை ஆண்ட இருகட்சிகளும் (S L F P., U N P) ஏற்றுக் கொண்டன (S L F P பண்டா செல்வா ஒப்பந்தத்திலும் U N P டட்லி - செல்வா ஒப்பந்தத்திலும்) இந்த இரு ஒப்பந்தங்களும் வடக்கு,

## கூரை பிரித்து கொள்ளை

ஒட்டுசுட்டான், செவ்.

ஒட்டுசுட்டானிலுள்ள முல்லைத்தீவு மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தின் அலுவலகப் பெற்றேஸ் சீற் கூரை உடைக்கப்பட்டு உள்ளே பூட்டியிருந்த மின்சார விசிறிகள் பல்புகள் மற்றும் உபகரணங்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக விவசாய உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

கிழக்குமாகாணங்கள் தொடர்புற்று இருக்க வேண்டியதை ஏற்றுக் கொண்டன. ஏனெனில் தமிழர் அங்கு சமுதாயங்களாக வாழ்ந்தனர். இதனை எதிர்த்தவர்கள் இன்று எதையும் செய்யதயாராக எம்மை ஆண்டு கொண்டிருக்கிறார்கள். போராளிகளை பயங்கரவாதிகள், தீவிரவாதிகள் என்று கூறி நாள்தோறும் மக்கள் சாதனங்களான பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி மூலம் சிங்களமக்களை தமிழருக்கு எதிராக தூண்டி வருகிறார்கள். உண்மையாகவே தமிழ் போராளிகள் நீக்கப்பட வேண்டியவர்கள் அல்லர். அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை கவனத்தில் எடுத்து அவர்களுக்கு உண்மையான தனிநாட்டு உரிமையை முழு இலங்கைக்குள்ளேயே கொடுத்தால் அதற்கும் தயாராக உள்ளனர். ஆனால் எமது அரசோ கூடிப்பேச்சுவார்த்தை நடத்தாமல் ஆயுதப்படைகளையும், ஊர்காவற்படைகளையும் இதற்குள் புகுத்தியுள்ளது. அவர்களுடைய இந்நடத்தை பற்றி பிறநாடுகளாலேயே கண்டிக்கப்பட்டுள்ளது.

துர்நடத்தையை போராளிகள் எதிர்த்தால் அவர்களுக்கு பயங்கரவாதிகள் எனும் நாமம் சூட்டப்படுகிறது. தரைக்கண்ணி வெடிகளின் உதவியுடன் மக்களை அழிக்க வரும் அரசபடையினரை தமிழ் போராளிகள் தடுக்கின்றனர். அரசபடையினரால் எந்தத் தமிழனாவது கொல்லப்பட்டால் அவன் நிச்சயமாக ஒரு பயங்கரவாதியாகிறான், தற்செயலாக ஒரு படைவீரன் இறந்தால் சுற்றிவரவுள்ள மக்களைக் கொன்று அவர்களின் உடமைகளையும் சூறையாடுவர்.

பலாத்காரத்தை நிறுத்துவதற்கு எத்தனையோ இலகுவான வழிகள் உண்டு. இருதரப்பினரும் ஆயுத பாவனையை குறிப்பிட்ட காலம் வரையாவது நிறுத்த வேண்டுமென ஒரு கட்டளையிடவேண்டும் ஒரு குறிப்பிட்ட காலம் வரை இக்கட்டளையை நீடிக்கலாம். (உதாரணத்திற்கு பிலிப்பைன்ஸ் பிரதம மந்திரி தனது பாதுகாப்பு மந்திரி சண்டைக்கு போவதென நின்றாலும் அவர் சமாதான வழிகளையே நாடுகின்றார்) அதன் பின் ஆயுதபடையும் ஊர்காவல்படையும் தங்களுடைய முகாமிற்கு போக கட்டளையிடவேண்டும். அப்போது தான் பலாத்காரம் நிறுத்தப்படும் இப்போதான் மலை ஒரு ஊதிய பாம்புப் பொந்து என்பது மக்களுக்கு தெரியும். அன்றைய சிறந்த தலைவர்களால் 30 வருடங்களுக்கு முன் தமிழருக்கு கொடுத்து ஏற்றுக்கொண்டவைகளை திருப்பி கொடுத்த பின்னர் சிங்கள மக்களும், தமிழ் மக்களும் ஏனையோரும் ஒரு சிறப்பான தீர்வு காணலாம். ஆட்களை அழிக்கும் பணத்தை பாதுகாத்து அதை வறியவருக்கும் ஏழைகளுக்கும் (தமிழர், சிங்களவர் என்ற பாகுபாடின்றி) பாவிக்கலாமென்று தீர்மானிக்கலாம்.

Dr. R. W. C தம்பையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A/L 87 DAY CLASS பகுதி - II (மாலை)
ஒவ்வொரு பாடங்களிலும் பகுதி பகுதியாக மீட்டலுடன் வினு/விடை வகுப்பு நடைபெறவுள்ளது.
19-11-86 புதன் 1-00 மணிக்கு வகுப்பு ஆரம்பமாகின்றது. கிழமை நாட்களில் 5-00 மணிவரை வகுப்புக்கள் நடைபெறும். பரீட்சை எடுத்து புள்ளிகள் குறைந்த மாணவர்ட்கு உகந்த வகுப்பு.

| | | |
|---|---|---|
| Physics | — | Mr. மணியம், விக்கி |
| Chemistry | — | Mr மோகன், சிவசோதி |
| Maths | — | Mr. சுந்தரகுமார் |
| Zoology | — | Mr. இளங்கோவன் |
| Botany | — | Mr பாலா |

DAY CLASS பிரிவு I இல்

| | | |
|---|---|---|
| Electricity | — | Mr மணியம |
| Inorganic | — | Mr. மோகன் |

DAY CLASS பிரிவு II இல்

| | | |
|---|---|---|
| Heat | — | Mr. மணியம் |
| Sound | — | Mr. விக்கி |
| Physical | — | Mr. மோகன் |
| Organic | — | Mr. மணியம் |

விபரங்கட்கு:-
NEW SCIENCE ACADEMY,
JAFFNA. [A-2983]

---

**BECON**

156/3, ஸ்ரான்லி வீதி,
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)
யாழ்ப்பாணம.

**87 A/L 88** சனி, ஞாயிறு பிரிவுகள்

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. வரதராஜன் |
| கணக்கியல் | — | திரு, மரியதாஸ் |
| அளவையியல் | — | திரு S S மனோகரன் |
| வர்த்தகம் | — | திரு ரட்ணம் |
| இந்துநாகரிகம் | — | திருமதி அருள்நங்கை |
| தமிழ் | — | திரு நாகேஸ்வரன் |
| புவியியல் | — | திரு. சண் |

ஆரம்பம்: 23-11-86 (ஞாயிறு)

**87 A/L — 11·00 மணி**
**88 A/L — 11-30 மணி**

(A 2887)

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

காங்கேசன்துறை தையிட்டி குணரத்தினம் சிறிகுணபாலன்
வழக்காளி

இல.; ஈடு/5371

எதிராக

| | |
|---|---|
| மல்லாகம் கோட்டைக்காடு | 1. கணபதி துரைராசாவும் |
| ,, ,, | 2. பெண் சந்திரமதியும் |
| உரும்பராய் மேற்கு | 3. செல்லர் சுந்தரலிங்கமும் |
| ,, | 4. பெண் செல்வரத்தினமும் |
| பலாலி | 5. சிதம்பரன் வேலனும் |
| ,, | 6. பெண் இலட்சுமியும் |

எதிராளிகள்

மல்லாகம் டிஸ்திறிக்கோட்டில் 5371 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகளை 1986 ஆம் ஆண்டு நவம்பர் (கார்த்திகை) மாதம் 21 ஆம் திகதி (21-11-86) வெள்ளிக்கிழமை முதலாம் காணி முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று 2-ம், 3-ம் காணிகள் முறையே அன்று பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்றும் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபாய் 35 000/-ம். இதில் ரூபாய் 20.000/-க்கு 18-11-83 திகதி தொடக்கம் 30 10-85 திகதி வரைக்கும் 100-க்கு 60 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 12 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 6897-10 சதம்.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி மல்லாகம் கோவிற்பற்று ஏழாலை இறை 'கோட்டைக்காடு' நிலப்பரப்பு (1½ ஒன்றரையும் வடக்கெல்லைக் காணியின் வடக்கெல்லையில இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழிவாய்க்கால பாவிப்புரித்தும் இதற்கு எல்லை கிழக்கு மூன்றடி அகல வாய்க்கால் உடபட பாதை வடக்கு கதிரன் செல்லப்பாவின் ஆதனம், மேற்கு சீனியர் மார்க்கண்டுவின் ஆதனம், தெற்கு மிகுதி ஆதனமும் இதடங்கலும்.

2. மேற்படி மயிலிட்டிக் கோவிற்பற்று பலாலி இறை 'தோப்பு' நிலப்பரப்பு (2) இரண்டும் தென்னைகளும் மாமரங்களும். இதற்கு எல்லை கிழக்கு சின்னவன் மகன் செல்லம்மாவின் ஆதனம். வடக்கு ஒழுங்கை, மேற்கு குளம், தெற்கு இதன்கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் மூன்றும் ஆதனம் இதடங்கலும் இன்னும் இதன் கிழக்கெல்லைக் காணியில் இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் மற்றும் வழமையான வாய்க்கால் வழியுரித்தும் இதடங்கலும்.

3. மேற்படி இறை 'தோப்பு' நிலப்பரப்பு [10] பத்து, இதில் மேற்குப் பக்கமாக நிலப்பரப்பு (5) ஐந்து. இதில் தெற்குப் புறமாக நிலப்பரப்பு [3] மூன்றும பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு சின்னவன் மகன் செல்லம்மாவின் ஆதனம், வடக்கு மேலே விபரிக்கப்பட்ட 2-ம் ஆதனம் மேற்கு குளம், தெற்கு ஈடு கொடுக்கக் காரரின் ஆதனம் இதடங்கலும் இன்னும் கிழக்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழிவாய்க்காலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை,
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்.

தெல்லிப்பளை.
10-9-1986 (C 5872)

---

## புலிகளின் குரல்

யாழ்ப்பாணம், புதன்
புலிகளின் குரல் வானொலி நாளந்தம் மாலை 4- 15 மணிக்கும் இரவு 9-15 மணிக்கும் ஒலிபரப்பப்படுகின்றது.
முப்பது நிமிட சேவையான இந்தக் குரல் சிற்றலை 41 மீற்றர் 7050, 7030, 7010 கிலோ ஹேட்ஸ் K.H.Z அலைவரிசையில் நடைபெறுகிறது.

---

## ஓராண்டு நினைவஞ்சலி



**சண்முகம் பரமநாதன்**
[C A S]
(இளைப்பாறிய உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி)


தோற்றம்: 18-03-1915
மறைவு 19-11-1985
திதி: 08-12-1986

ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

81, நக்கா வீதி,
யாழ்ப்பாணம்.
C 5874

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



**அம்பலம் கோணேஸ்வரன்**

தோற்றம்: 19-04-1963
மறைவு; 11-12-1984
திதி; 19-11-1986

மண்மீது மரணங்கள்
மைகுலுக்கும்,
மரியாதைகண்டாலோ,
மெய்சிலிர்க்கும்!
விண்மீது பகை நின்றே,
விழாக்காணும்;
விதியென்றே தமிழ்ச்சாதி
கதைக்காணும்!
கண்மீது கைவைத்து,
கவர்ந்து போகும்,
கதைகேட்ட பின்னாலும்
கழிந்து சாகும்,
புண்மீது சீழ்கொண்டு,
புணர்ந்த வாழ்க்கை,
புரியாத போதேது
உணர்ந்த யாக்கை?!

உங்கள் ஆத்மா சாந்தி அடைய எமது அஞ்சலி
இங்ஙனம்,
நண்பர்கள்.
மாதகல் C 5877

---

**87 A/L Day Class**

| | | |
|---|---|---|
| APPLIED | — | எளிமை இசை இயக்கம் |
| PURE | — | சிக்கல் எண்கள் |

திங்கள், வெள்ளி [காலை 7-00 — 9-00]

**88 A/L**

| | | |
|---|---|---|
| PURE | — | நுண்கணிதம் |
| APPLIED | — | காவி'வ் |

வியாழன், வெள்ளி 4-00 — 6-00

ஆரம்பம்:- 20-11-86
ஆசிரியர்:- A. பத்மநாதன்

**NIRU TUITION CENTRE**
KONDAVIL. [A-2885]

---

# Gana's Institute
## Nallur
## A/L 87, 88 New Batch

PHYSICS- Mr மணியம். Mr. விக்கி
CHEMISTRY-Mr செல்வா. BOTANY- Mr. Bala
ZOOLOGY- Mr. இளங்கோவன்.
APP. and PURE- Mr சுந்தரக்குமார்.
விசேட பயிற்சி ஆங்கில வகுப்பு- Mr. பஞ்சாட்சரம்;
வகுப்புக்கள் ஆரம்பம்:
19-11-86 3- 30 p m.

விபரங்கட்கு: 499, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(A 2884) (கோயில் முன்பாக)

---

## பண்டித பரீட்சைகள்

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் பிரவேச, பால பண்டித, பண்டித பரீட்சைகள் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் நடத்தப்படும். விண்ணப்ப முடிவு திகதி 30-11-86. விண்ணப்பப் படிவங்களைக் கல்வித் திணைக்களத்தில் பெறலாம்.

கு. சோமசுந்தரம்,
காரியதரிசி,
யா. ஆ. தி. பா. சங்கம்,
கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம். [C-5868]

---

INSTITUTE OF TECHNICAL STUDIES,
VADDUKODDAI.

1. I. A: A., I. A. B
June 1987 Exams, Weekend Classes.
விரிவுரைகள் 29-11-86இல் இருந்து ஆரம்பமாகின்றன.
Student Registration will be done by us.

2. Electrical Wiring, Motor Rewinding } 2 மாத காலம்
ஆகிய பயிற்சி நெறிகள் 20-11-86இல் ஆரம்பமாகின்றன;

மேலதிக விபரங்கட்கு நிறுவனத்துடன் தொடர்பு கொள்க;

REGISTRAR;

[C-5858]

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வட்டுக்கோட்டை, அராலி மேற்கு
விசுவலிங்கம் செல்வரத்தினம். வழக்காளி:

இல. ஈடு / 5547 எதிராக

சுழிபுரம், சுழிபுரம்தெற்கு 1. செல்லத்துரை சுப்பிரமணியமும்
2. பெண் இலட்சுமியும்

எதிராளிகள்.

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டில் 5547 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1986 ஆம் ஆண்டு நவம்பர் (கார்த்திகை) மாதம் 26 ஆம் திகதி (26-11-86) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் முறையே அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபாய் 33,600/-ம் இதில் ரூபாய் 30,000/-க்கு 24 4-84 திகதி தொடக்கம் 13-6-85 திகதி வரைக்கும் 100க்கு 48 விதவட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 5068-10 சதம். இதில் செலவில் ஒரு பகுதியாக ரூபாய் 1,000 கொடுபட்டுள்ளது

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி சங்கானைக் கோவிற்பற்று சங்கானை மேற்கு இறை "நீலாக்கியோடை" நிலை. இலாச்சம் இரண்டும் குழி எட்டும் வீடும் எல்லை கிழக்கு தெரு, வடக்கு சந்தையா சுந்தரத்திற்குரிய ஆதனம். மேற்கு சூரி வயிரமுத்துவின் ஆதனம் தெற்கு இராமலிங்கம் மார்முத்துவிற்குரிய ஆதனம். இந்த எல்லைப்படி இதடங்கலும் தெற்கு எல்லைக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றிலிருந்து இதற்குரிய பங்கும் தூர்வை வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் அடங்கலாகவும்.
பதிவு இல. ஈடு 526/192.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை,
கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்.

தெல்லிப்பளை.
19 9-86. (C 5871)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர், ஆசிரியர், மாணவர்கள்

# அனைவரும் ஒன்றுசேர்ந்து உழைக்கவேண்டும்

## வவனியாவில் கல்விப்பணிப்பாளர்

வவனியா, நிருபர்

''கல்வி என்ற சமையல் மூன்று அடுப்பில் வேகவேண்டும். பெற்றோர், மாணவர், ஆசிரியர் ஆகியவர்களே இந்த மூன்று அடுப்புக்களும் இம்மூவரும் சேர்ந்து உழைக்க வேண்டும்'' இவ்வாறு வவனியா கல்விப்பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம்பாவற்குளம் தமிழ் மகாவித்தியாலய பெற்றோர் தினவிழாவில் பேசுகையில் கூறினர்.

மேற்படி பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் கல்விப்பணிப்பாளர் மேலும் பேசுகையில்:

'வவனியா மாவட்டத்தின் கல்விநிலையினை கண்டு அதனை நிவர்த்திசெய்வதேஎமது நோக்கமாகவுள்ளது. வவனியா மாவட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது இதனை நிவர்த்திசெய்ய கல்விச் சேவைகள் ஆணைக்குழுவிடம் முறையிட்டுள்ளேன் என்னுல்முறையிடமட்டுமே முடியும் அதே வேளையில் இங்கிருந்து மாறிப் போகும் ஆசிரியர்களையும் இப்போதயசூழ்நிலை கட்டுப்படுத்த முடியாத நிலையிலுள்ளது. சில ஆசிரியர்கள் அமைச்சுக்கு சென்று இடமாற்றம் கோரப் பெற்று செல்கின்றார்கள்.

வவனியா மாவட்டத்திலுள்ள ஆசிரியர் வெற்றிடங்களை கல்வி அமைச்சு கேட்டுள்ளதாகவும் இதன் விபரம் அனுப்பப் பட்டுள்ளதாகவும் தெரிவித்த இவர் கஷ்டத்தின் மத்தியில் சேவையாற்றும் ஆசிரியர்கள் சூழ்நிலைக்கேற்ப லீவு எடுப்பதனைக் குறைத்து மாணவர்களுக்கு கல்வி புகட்டுவதிலீடுபடவேண்டும் என்று கூறினர்.

மேலும் இப்பாடசாலையில் விஞ்ஞான உயர்தரவகுப்பு ஆரம்பிக்கப்பட வேண்டுமாயின் தகுதிபெற்ற 15 மாணவர்கள் வேண்டும் எனவும் கூறினர்.

செட்டிகுளம் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ் அருளானந்தன், பாடசாலை அதிபர் திரு. கே. தர்மலிங்கம் ஆகியோர் உரையாற்றினர்கள்.

---

'ஷெல்' தாக்கியதால்

# வெளியே வந்திருந்த குடலை தள்ளிவானில்ஏற்றிவந்தேன்

யாழ்ப்பாணம், புதன்

''ஷெல் வெடித்ததினுல் இறந்தவரின் அடிவயிற்றில் பெரிய காயம் ஏற்பட்டது. குடல் வெளியில் வந்திருந்தது. குடலையெல்லாம் என் கையால் உள்ளேதள்ளி சால்வையினுல் வயிற்றைச் சுற்றிக்கட்டி வான் ஒன்றில் யாழ். ஆஸ்பத்திரிக்கு ஏற்றிவந்தேன்.'

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த ஞா. தேவசகாயத்தின் [வயது 50] மரண விசாரணையில் சாட்சியமளிக்கும செல்லியாம்பிள்ளை இவ்வாறு கூறினர்:

யாழ் பதில் நீதவான் க.கேசவன் மரண விசாரணை நடத்தினர்.

அவர் மேலும் கூறியதாவது:-

''இறந்தவருடன் ஒன்றாக வசித்துவந்தேன். இம் மாதம் 11ம் திகதி அதிகாலை 4மணிக்கு 'ஹெலி' தாழப்பறந்து சுட்டது வெடிச் சத்தங்களும் கேட்டன அச்சுவேலியிலிருந்து மக்கள் வெளியேறினர்கள் நானும் இறந்தவரும் எங்கள் பிள்ளைகளைக் கோப்பாய்க்கு அனுப்பிவிட்டுத் திரும்பவும் வீட்டுக்கு வந்தோம் நான் ஒமெந்து 'பினாற்றுல்'க்குக் கீழ நின்றேன். இறந்தவர் வீட்டு வாசற்கதவுடன் நின்றூர். 'ஷெல்' ஒன்று வந்து வீட்டு வாசலில் வெடித்ததால் அவருக்குக் காயம் ஏற்பட்டது அவரை ஆஸ்பத்திரிக்குவானில் ஏற்றிச் சென்றோம். அந்த வானில் மற்றும் நான்கு காயக்காரர் வந்தனர். நேற்று முன் தினம் அவர் இறந்துவிட்டார்.''

விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. [இ

---

## மக்கள் ஒன்றியம்

யாழ்ப்பாணம், புதன்

மீசாலை தெற்கு மக்கள் ஒன்றிய அங்குரார்ப்பணக்கூட்டம் அண்மையில் மீசாலை கிராம முன்னேற்றச்சங்க மண்டபத்தில் நா. கா. நடராசா தலைமையில் நடைபெற்றது.

நடப்புவருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் நா. கா. நடராசா, உபதலைவர்: சி. எஸ். திருநாவுக்கரசு, செயலாளர்: வி ரி. கனகரத்தினம். நிதிச்செயலாளர்: ச ரவீந்திரன். துணைச் செயலாளர்: க. கார்த்திகேசு.

நிர்வாகசபை உறுப்பினர்களாக ச. சிவானந்தம், கு. கதிர்காமசேகரர். சு பெ. மயில்வாகனம், ஆ. சிறீகரன். செல்வி ந. சூரியகுமாரி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

---


வெலிங்டன்
திரையில்
10-30, 2-30, 6-30
சிவகுமார்-ராதிகா
கவுண்டமணி
கல்லாப்பெட்டி சிங்காரம்
நடித்த
நிலவு சுடுவதில்லை
(கலர்)

இன்று முதல்
லிடோ
10-30, 2-30 4-30 6-30
ROMANCING
THE STONE
(Action and Thrills)
[Coluor]


---

## மகா கும்பாபிஷேகம்

பருத்தித்துறை நிருபர்

'தும்பளை நெல்லண்டைபத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் விநாயகர் எழுந்தருளிக்கும், முருகன் எழுந்தருளிக்குமான மகாகும்பாபிஷேகம் இன்று 19ந் திகதி புதன்கிழமை நடைபெறுகின்றது.

---

## இன்று உரக்களஞ்சியத் திறப்புவிழா

யாழ்ப்பாணம், புதன்

யாழ். அபிவிருத்திச் சபையின் உதவியுடன் கமநல சேவைத்திணைக்களத்தினுல் உடுவில் கமநல சேவை நிலையப் பகுதியினுள் அடங்கும் குப்பிளான் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் பிரிவினில் ஒரு லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட உரக்களஞ்சியத்தினை இன்று காலை யாழ் மாவட்ட கமநல சேவை சிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு பரமலிங்கம் திறந்துவைப்பார்.

---

## மழையின்றி பயிர்கள் பாதிப்பு

ஒட்டுசுட்டான், செவ்வாய்

வன்னிப்பிரதேசத்தில் நீண்ட நாட்களாக மழை இல்லாமையால் நெற்பயிர்கள் உப-உணவுப்பயிர்கள் யாவும் பாதிப்படைந்துள்ளன.

இதனுல் பல்லாயிரக் கணக்கான ஏக்கரில் விவசாயம் செய்த விவசாயிகள் பெரும் பாதிப்பை அடைய வேண்டிய நிலைக்கு வந்துள்ளார்கள்.

இதுஇவ்வாறு இருக்க கடந்த 1983 இனக்கலவரத்திற்குப் பின்பு இப்பெரும் போகத்துடன் மூன்று பெரும் போகச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது

---

## சிதம்பரத்தில் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், புதன்

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் கோவில் ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் ஸமேத ஸ்ரீமந் நடராஜமூர்த்தி சித்ஸபா ஸம்புரோக்ஷண சித்விலாஸ மகா கும்பாபிஷேகம் அடுத்தாண்டு பெப்ரவரி மாதம் 11ம் திகதி காலை நடைபெறவுள்ளது.

அன்றுமாலை பஞ்சமூர்த்திகள் வீதி உலாவும் அடுத்த நாள் இரவு ஆயிரங்கால் மண்டப் பிரவேசமும், 13-ம் திகதி வெள்ளி அதிகாலை மஹாபிஷேகமும் நடைபெறவுள்ளது. 14-ம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தரிசனம், ஞானகாச சித்ஸபா பிரவேசம், விடையாத்திடஷ்ப பல்லக்கு உற்சவம் ஆகியன இடம்பெறும்.

இம் மகா கும்பாபிஷேக நிகழ்ச்சிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் பக்தர்களும் செல்ல ஏற்பாடாகியுள்ளது. [ஊ]

---

## யாழ். அகதிகளுக்கு

# ஜப்பான் லயன்ஸ் கழகம் உடுபுடவைகள் அன்பளிப்பு

மாவிட்டபுரம், செவ்

ஜப்பான் நாட்டு லயன்ஸ் கழகத்தினுல் அகதிகளுக்கு வழங்கும்பொருட்டு அன்பளிப்புச் செய்யப்பட்ட உடுபுடவைகள் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த அகதிகளுக்கு லயன்ஸ் கழகங்கள் மூலம்வழங்கப்பட்டுள்ளன.

ஜப்பான் நாட்டு லயன்ஸ் கழகம் பாவித்த உடுபுடவைகளையும் தொழிற்சாலைகளில் விலக்கப்பட்ட புடவைகளும் கொண்ட 2643 பார்சல்களை இலங்கை லயன்ஸ்கழகத்திற்கு அன்பளிப்புச்செய்திருந்தது

இதில் கண்டி மாவட்டத்திற்கு 325 பார்சல்களும் அநுராதபுரம் மாவட்டத்திற்கு 312 பார்சல்களும். வெலிகப்புவ மாவட்டத்திற்கு 233 பார்சல்களும், நீர்கொழும்பு மாவட்டத்திற்கு 110 பார்சல்களும் மன்னூர் மாவட்டத்திற்கு 2.1 பார்சல்களும், யாழ்ப்பாண மாவட்டத்திற்கு 200 பார்சல்களும், நுவரெலியா மாவட்டத்திற்கு 400 பார்சல்களும். பொலனறுவ மாவட்டத்திற்கு 230 பார்சல்களும், மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 126 பார்சல்களும். திருமலை மாவட்டத்திற்கு 96 பார்சல்களும், பதுளை மாவட்டத்திற்கு 310 பார்சல்களும், கொழும்பு மாவட்டத்திற்கு 100 பார்சல்களும் வழங்கப்பட்டன.

யாழ் மாவட்டத்திற்குவழங்கப்பட்ட 200 பார்சல்களும் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வந்துசேர்ந்து மாவை லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த லயன் க, தனபாலசிங்கம் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் உதவியுடன் கப்பலில் இருந்து இறக்கப்பட்டு யாழ் வை. எம். சீ. ஏ. மண்டபத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது

அங்கு வைத்து சகல லயன்ஸ் கழகங்களுக்கும் அகதிகளுக்கு விநியோகிப்பதற்காக இப்புடவைப்பொதிகள் வழங்கப்பட்டன. [ஊ]

---

## இருபத்தியேழு மாதங்களின் பின் விடுதலை

வல்வெட்டித்துறை, செவ்

பூஸா முகாமில் 27 மாதங்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்த கிட்டிணர் ரவிக்குமார் (வயது 22) என்ற வல்வை இளைஞர் விடுதலை செய்யப்பட்டார்.

84-ம் ஆண்டு வல்வையிலிருந்து பூஸவுக்கு கொண்டு செல்லப்பட்ட இவ் இளைஞர் சிலகாலம் குருநகர், கோட்டை, பலாலி ஆகிய இடங்களிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

எதிர்வரும் 29-ந் திகதி கோட்டை முகாமில் வந்து கையொப்பமிட்டுச் செல்ல வேண்டும் என்ற பணிப்பிலேயே இவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

---

## அடிக்கடி மின்தடை

நல்லூர், செவ்

திருநெல்வேலிப் பகுதியில் தினமும் மாலை ஆறு மணிக்கும் இரவு எட்டு மணிக்கும் இடையில் அடிக்கடி மின் தடை ஏற்படுவதாகத் திருநெல்வேலி மின் பாவனையாளர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

நல்லூர்ப் பிரிவு அபிவிருத்திச் சபை இதுபற்றி திருநெல்வேலிக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்ட போது, மின் பாவனை மிக அதிகரித்தமையினால்தான் சுபமாக இயங்கும் மின் தடைக் கருவி தடையை ஏற்படுத்துவதாகவும், மிக விரைவில் அமைக்கப்படும் இரு புதிய மின் மாற்றிகள் பாவனைக்கு வந்தவுடன் இதில் ... [illegible]

---

## புங்குடுதீவில் வீதிகள் சீர்கேடு

புங்குடுதீவு, செவ்

புங்குடுதீவில் உள்ள சகல வீதிகளும் பெரும் அவலநிலை உள்ளன. குண்டும் குழியுமாக கற்கள் எல்லாம் வீதிகளின் அருமருங்கிலும் சிதறுண்டு இருப்பதனுல் மக்கள் நடந்து செல்வதற்கு பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

குறிப்பாக குறிச்சிக்காடு, ஆலடிச்சந்தி, மகாவித்தியாலய வீதி, இறுப்பிட்டி தம்பர்வைடயடி ஆகிய பிரதான வீதிகள் எல்லாம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது.

---

## புதிதாக சேருவோருக்கு அறிவுறுத்தல்

வேலணை, செவ்

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்கிளைக்குழுக்களுக்கான தேர்தல்கள் அடுத்த வருடமுற்பகுதியில் நடைபெறவிருப்பதால் இச்சங்கத்தின் கிளைக்குழு அங்கத்தவர்களுக்கான வாக்காளர் இடாப்புகள் அனைத்தும் டிசம்பர் மாதம் 31ம் திகதி மூடப்படவுள்ளன. எனவே புதிய உறுப்பினர்களாக சேரவிரும்புவோர்கள் மேற்கூறப்பட்ட திகதிக்குமுன்னர் அருகமையில் உள்ள கிளை முகாமையாளருடன் தொடர்பு கொண்டு சேர்ந்துகொள்ளுமாறு மேற்படி சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

---


நியூவிக்ரேஸ்
புதிய வீடியோ பட வெளியீடுகள்
1. அறுவடைநாள்
பிரபு, பல்லவி (மாஸ்டர்)
2. நண்பன்
ஆனந்பாபு, ஜீவிதா (மாஸ்டர்)
நியூவிக்ரேஸ்
எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்
தொலைபேசி: 23532. (A-2889)

மிது வீடியோ மூவிசாரின்
இன்றைய புதிய வெளியீடுகள்
1. சிவாஜியின் புதல்வர்கள்
பிரபு, ராம்குமார் மற்றும் பல்லவி, செந்தில்
நடித்த
சிவாஜி புரடக்சன்ஸ்
★ அறுவடைநாள் ★
(தரமான பிரதி)
2. பாண்டியராஜன், ஆனந்பாபு, ஜீவிதா
நடித்த
★ நண்பன் ★
(தரமான பிரதி)
மிது வீடியோ மூவிஸ்
பிரதான வீதி, சித்தன்கேணி.
[A-3124]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

புதன்கிழமை 19-11-86

## தொடர்ச்சியாக துப்பாக்கிவேட்டு

யாழ்ப்பாணம், புதன்

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் நள்ளிரவு தொடர்ச்சியாக துப்பாக்கி வேட்டுச் சத்தம்கேட்ட வண்ணமிருந்தது. இடையிடையே குண்டுகள்வெடித்தன.

நேற்று அதிகாலை 4மணியளவிலும் குண்டொன்று வெடித்தது. இதனால் முகாமுக்குஅண்மித்தபகுதிகளில் வசிக்கும்மக்கள் அச்சமடைந்து கொட்டும்பனியிலும் வீட்டைவிட்டு வெளியேறிய வண்ணமிருந்தனர். (மா)

### இந் - இலங்கை---
[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

இப்பேச்சுக்கள் இன்னும் முடியவில்லையென்றும் இருதரப்பினரும் புதுடில்லி சென்று தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள் என்றும் திரு. நட்வார் சிங் தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் இருபகுதியினரும் இப்பொழுது புதுடில்லி நோக்கிப் புறப்பட்டுள்ளனர்.

இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ் காந்தியும் இலங்கை ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனாவும் நேற்று பெங்களூரில் சுமார் மூன்றுமணி நேரம் பேச்சு நடத்தியபிறகு இலங்கை அரசுக்கும் தமிழ் போராளிகளுக்குமிடையே மீண்டும் பேச்சுக்கள் நடத்துவதற்கு அடிப்படையாக மேலும் விரிவான யோசனைகளை உருவாக்குமாறு தத்தம் வெளிவிவகார அமைச்சர்களுக்குகூறியிருந்தனர். (ஒ)

# அரசாங்க, கூட்டுத்தாபன, வங்கி, தனியார்துறை ஊழியர்கள் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

[அலுவலக நிருபர்]

அரசாங்க, கூட்டுத்தாபன, வங்கி, தனியார் துறைகளைச் சேர்ந்த ஊழியர்கள் யாழ்ப்பாணத்தில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினார்கள்.

''இந்திய அரசாங்கம்தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்கவேண்டும்; தமிழீழ விடுதலைப்புலிகளிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்களை மீண்டும் கையளிக்கவேண்டும்; தஞ்சம் புகுந்திருக்கும் போராளிகளைத்துன்புறுத்தவேண்டாம்'' என்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற்றது.

தமிழர் கலாசார அவை நேற்றும் நேற்று முன்தினமும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடைபெறுவதற்கு ஒழுங்குகள் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

நேற்று நடைபெற்ற ஊர்வலத்தால் யாழ்ப்பாணத்தில் உள்ள அரச, கூட்டுத்தாபன, வங்கி, தனியார்துறை அலுவலகங்களில் வேலைகள் நடைபெறவில்லை.

யாழ். ஆரியகுளம் சந்தியிலிருந்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் நேற்றுக் காலை 10 மணியளவில் ஆரம்பமானது.

ஆண்கள், பெண்கள் உட்பட ஏராளமானோர் சுலோக அட்டைகளைத் தாங்கிக்கொண்டு, கோஷங்களை எழுப்பியவாறு ஊர்வலமாகச்சென்றனர்.

ஆரியகுளத்தில் ஆரம்பமான இந்த ஊர்வலம் நல்லூர் கந்தசாமி கோவிலைச் சென்றடைந்தது.

பின்னர் அங்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், ''இந்தியாவின் ஒருமைப்பாட்டைப் பேணும் அதே சமயம் தெற்காசியாவில் இந்தியாவின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்கின்றோம்; ஆனால் எமது தமிழீழப் போராட்டத்தை இந்திய அரசு அங்கீகரிக்கவேண்டும்'' என்று அங்கு பேசிய பலரும் எடுத்துக் கூறினார்கள். (மா)

### எமது---
(1ம் பக்கத் தொடர்ச்சி)

கட்ட உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவாக பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவர்கள் உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர். (ஒ)

### விஜி---
[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ளது.

### உண்ணா விரதத்தை குழப்பக்கூடாது

இக்கடிதத்தில் தாம் உண்ணாவிரதமிருக்கையில் ஒருவரும் அதனைக்குழப்பக்கூடாது என வேண்டுகோளொன்றை விடுக்கவுள்ளனர்.

இதனையடுத்து பத்திரிகையாளர் மாநாடு நடைபெறவுள்ளது. (ஒ-ஊ)

### ராஜீவ்---
(1ம் பக்கத் தொடர்ச்சி)

மென்று இலங்கை அரசு தெரிவித்துள்ளதாகவும் கூறினார்.

பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கும் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்குமிடையிலான பேச்சுக்கள் பல கட்டங்களில் நடைபெற்றதாகவும், இவற்றில் பிரதமருக்கு உதவும் வகையில் தாமும் முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரனும் பெங்களூர் சென்றிருந்ததாகவும், தாங்கள் இப்பேச்சுவார்த்தையில் நேரடியாகக் கலந்துகொள்ளவில்லையென்றும் அவர் தெரிவித்தார். (ஒ)

### மரணப்படுக்கை---
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளதாவது:

ஓர் நாட்டின் சிறையிலுள்ள ஆயுள்தண்டனை, மரணதண்டனைக் கைதிகள்கூட சிறைவாசம் முடிந்தபின் வீடுசெல்ல அனுமதிக்கப்படுவர். ஆனால் கத்தோலிக்க மதகுரு ஒருவருக்கு மரணப்படுக்கையிலிருக்கும் தாயை பார்க்கக்கூட அனுமதி மறுக்கப்பட்டது மிகவும் வேதனைக்குரியதே.

கடந்த ஒக்டோபர் மாதக் கடைசியில் யாழ். கோட்டை இராணுவ முகாம் காப்டன் கொத்தலாவல முகாமிலிருந்து வெளியேவந்து புலிகள் இயக்க யாழ். மாவட்டப் பொறுப்பாளர் கிட்டுவுடன் கைகுலுக்கி விஜயகுமாரணதுங்காவை ஒப்படைத்ததன் மூலம் இலங்கையில் நடைபெறுவது பயங்கரவாதமல்ல இங்கு நடப்பது இரண்டு மாநிலங்களுக்கிடையிலான யுத்தம் என்பதனைக் காட்டுகிறது.

பணயக் கைதிகளாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் எமக்கு அடுத்து என்ன நிகழும் என்பது தெரியவில்லை. 'பெரு' நாட்டுச் சிறையில் நடைபெற்ற சம்பவங்களை நினைக்கையில் எம்நிலை மிகவும் அச்சமாகவுள்ளது.

சிறையிலிருக்கும் தமது உயிருக்கு உத்தரவாதமளிக்க ஐ. நா. சபை அமைதிகாக்கும் படையை இங்கு அழைக்க வேண்டுமென்று பிதா. சிங்கராயர் தனது கடிதத்தில் ஜனாதிபதியைக் கேட்டுள்ளார். (கூ-கி)

### ஜனாதிபதி ஜே.ஆரின்---
(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மாகாணமான மட்டக்களப்புடன் இணைப்பதுதொடர்பாக இக்கமிஷன் அறிவுரை வழங்கும். இந்த யோசனைகள் பண்டாரநாயக்கா - செல்வநாயகம் உடன்படிக்கையில் அடங்கியுள்ளதாக இலங்கை அரசு தெரிவிக்கிறது.

### பாதுகாப்புக்குறித்து---
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேம்படி மகளிர்கல்லூரி, யாழ்.மத்தியகல்லூரிகளின் மாணவர்கள் மத்தியில் திரு. கிட்டு நேற்று உரைநிகழ்த்தினார்.

கோட்டை இராணுவத்தினர் தங்கள் தாக்குதல் நடவடிக்கைகளுக்காக அண்மையில் உள்ள மாணவர்களாகிய உங்களைப் பணயமாக வைத்துக்கொண்டு யாழ் நகருக்குள் வரலாம் என்று குறிப்பிட்ட திரு கிட்டு ''இராணுவத்தினர் அப்படி நடந்து கொள்ளும் தருணத்தில் உங்கள் புத்தகங்களையோ சைக்கிள்களையோ கவனிக்காமல் உங்களைப்பாதுகாப்பதற்காக தப்பித்து ஓடமுயல வேண்டும்'' என்று சொன்னார்.

'கோட்டைஇராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினரை வெளியேறவிடாது எமது இறுதிமூச்சு உள்ளவரைப்போராடுவோம்' என்றும் திரு. கிட்டு மாணவர்களுக்கு உறுதி அளித்தார். (மா)

### நீதி நியாயமின்றி---
[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கோரிக்கையொன்றை விடுத்துள்ளது.

தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டிருக்கும் சுமார் 120 தமிழ் இளைஞர்களுக்கு தென்னிலங்கையில் ஸ்தாபிக்கப்படவுள்ள புனர்வாழ்வு முகாமில் மறு வாழ்வு அளிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் லலித் அறிவித்துள்ளதைத் தொடர்ந்தே த. வி. கூட்டணி அரசியற்குழு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

கூட்டணி மேலும் தெரிவித்துள்ளதாவது:-

காலவரையறையற்ற காலங்களாகத் துன்புறுத்தல்களுக்கும், அட்டூழியங்களுக்கும் மத்தியில் தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ள மூவாயிரத்திற்கும் அதிகமான தமிழ் இளைஞர்களில் ஒரு பகுதியினரையே இவ்வாறு திட்டமிட்டுப் புனர்வாழ்வு முகாமிற்கு அனுப்புவதற்கு அமைச்சர் திட்டமிட்டுள்ளார்.

இந்த இளைஞர்கள் அரசாங்கத்தின் மிகக் கொடூரமான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அல்லது வேறெந்தச் சட்டத்தின் கீழோ இதுவரை குற்றம் சாட்டப்பட்டுக் குற்றவாளிகளாகக் காணப்படவில்லை.

இந்த இளைஞர்கள் விடுதலை செய்யப்பட வேண்டுமெனச் சட்டமா அதிபரினால் அல்லது மதியுரைச் சபையினால் சிபார்சு செய்யப்பட்டுள்ளதெனக் கூட்டணி நம்பகரமான தகவல்களைப் பெற்றுள்ளது. ஆனால் இவர்கள் அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் உத்தரவின் பிரகாரம் மேலும்தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்களென கூட்டணி கூறியுள்ளது. (கே)

### பொறுப்பதிகாரி
[நமது நிருபர்]

வவனியா இராணுவ முகாமில் தளபதியாகக் கடமையாற்றிய திரு. கொப்பேகடுவ யாழ். கோட்டை இராணுவ முகாமுக்கு பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [மா]

### செய்தி தவறானது

கொழும்பு, செவ்

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன்பேச்சுவார்த்தைநடத்தினர் என்ற செய்தியைஜனாதிபதி செயலகம் மறுத்துள்ளது.

பிரிஜ செய்தி ஸ்தாபனத்தை மேற்கோள் காட்டி இச்செய்தியை ஒலிபரப்பியமைக்காக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது கவலையை தெரிவித்துள்ளது. (ஒ)

### விஜிதரன்கடத்தல்---
(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் வீட்டுக்கு அருகில் எமது முகாம் இருப்பதைகாரணம் காட்டியும், முன்பொருமுறை ருசிங் சம்பவம் ஒன்றின் போது இவரை விசாரித்ததையும் காரணம் காட்டியும் எம் மீது சந்தேகம் கொண்டுள்ளமை தவறான ஒன்றாகும். இந்த சம்பவம் என்றாவது ஒரு நாள் வெளிச்சத்துக்கு வந்து நாம் களங்கமற்ற தூய்மையான போராளிகள் என்பதை யாவரும் அறியவைக்கும் இவ்வாறு தான் அன்றுதொட்டு எம்மீதுபழிகள் சுமத்தப்பட்டு எம்மையும் எமது மக்களையும் பிரித்துபோராட்டத்தைநசுக்க சிலர் முயன்று வருகின்றனர். இப்படியானதீயசக்திகளின் நயவஞ்சகவேலைகள் எந்தவொரு விடுதலைப் போராட்டத்திலும் எழுவதுஇயல்பானதொன்றே.

இச் சம்பவத்தைக் காரணங் காட்டி பல்கலைக்கழக மாணவர்களால் போராட்டம் தொடர்ந்து நடாத்தப்பட்டு வருகின்றது. இப் போராட்டத்தை இச்சம்பவம் யாரால் இடம்பெற்றதென அறிந்து அதற்கெதிராக நடாத்த வேண்டுமேதவிர தமது எதிரியாரென அறியாது தாம்செய்யும் இந்தப் போராட்டம் எவருக்கு எதிராக என்பதை புரியாது தாமும் குழப்பத்துக்குள்ளாகி மக்களையும் குழப்பத்திலாழ்த்தி நடாத்தும் இப் போராட்டம் சகல விடுதலை இயக்கங்களையுமே பாதிக்கும். இன்றைய எமது தமிழீழ போராட்டத்தை உயிருக்கு மேலாக நேசித்து எம்மையே அர்ப்பணித்து முன்னின்று நடாத்திவரும் எமது இயக்கத்தையும் இச்சம்பவங்கள் பாதிப்புக்குள்ளாக்கவே செய்கின்றது, எனவே மாணவர்களே, போராட்டத்திற்கான எதிரியை இனங்கண்டு உங்களது போராட்டத்தை நடாத்துங்கள் நீங்களும் குழப்பத்துக்குள்ளாகி எம்மையும் களங்கத்திற்குள்ளாக்கி மக்களை குளப்பாதீர்கள்.

தமிழீழ விடுதலைப்போராட்டத்தை நசுக்குவதற்காக ஏற்கனவே எமது மக்களிடையே பிரதேச வேறுபாடுகளை ஏற்படுத்தத்தக்கதாறு பல செயல்கள் தீயசக்திகளால் வளர்க்கப்பட்டதை நினைவில் நிறுத்தும்போது பல்கலைக்கழகமாணவன் கடத்தப்பட்டது (?) சம்பந்தமாக சகலரும் அவதானமாக பார்க்கவேண்டுமென்றே எண்ணுகின்றோம்.

## மரண அறிவித்தல்

### செல்வி செல்லர் இராஜகுமாரி
(பத்தமேனி, அச்சுவேலி)

செல்லர் இராஜகுமாரி 15-11-86அன்று காலமானார். இவர் செல்லர், இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், பாலசிங்கம் [பிரான்ஸ்], துரைசிங்கம், இரத்தினசிங்கம், தர்மகுலசிங்கம் (சுவிற்சலாந்து), புவிராஜசிங்கம் (சுவிற்சலாந்து), குமாரகுலசிங்கம், விஜயகுலசிங்கம் (பிரான்ஸ்), ராஜகுலசிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயவீரசிங்கம் (பிரான்ஸ்], சிங்கம் (றசாத்) ஆகியோரின் மூத்தசகோதரியுமாவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் 20-11-86 வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்; குடும்பத்தினர்,
பத்தமேனி, அச்சுவேலி.

(C-5884)

### செல்லப்பா வைத்திலிங்கம்
(ஆயுள்வேத வைத்தியர்)

அராலி தெற்கு ஆயுள்வேத வைத்தியர் செல்லப்பா வைத்திலிங்கம் காலமானார். இவர் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், யோகானந்தமலர், வசந்தி, ஜெயகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலேந்திரன், செல்வேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (19-11-86) பிற்பகல் 2-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

[C-5892]

## OBITUARY
### MR. D. P. SUNDERAMPILLAI

The Funeral service of Mr D. P. Sunderampillai will take place on Thursday 20-11-86 at 3 p. m. at his residence. Interment at St Johns' Church burial Grounds.

Mrs. D. P. Sunderampillai.
29, Eachchamoddai,
Chundukuli.

C 5819

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு நவம்பர் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram Eelanadu Telephone: 23389, 24125

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org